Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+ II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 20 (02.03.2005) புதன்கிழமை இதழ்: 153

- 2 MAR 2005

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

சகல நிகழ்வுகளுக்கும் ராசியான ஸ்தாபனங்கள்

மகாராசி சில்க்ஸ்

ரோசி சில்க்ஸ்



T.P.- 0777 286247

## அரசின் நடவடிக்கைகளை கண்டித்து இன்று மாபெரும் கண்டனப் பேரணி!

### பொதுமக்களை அணிதிரளுமாறு அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் – விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும், உடன்படிக்கையில் கைச்சாத்தாகிய சரத்துக்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தாமை, சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் அரசு இழுத்தடித்து வருகின்றமை, விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதான படுகொலை உள்ளிட்ட ஏழு விடயங்களைச் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் இன்று யாழ்.குடாநாட்டில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெறவுள்ளது.

இன்றுகாலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி அங்கிருந்து பலாலி வீதி ஊடாக கந்தர்மடம் சந்தியை சென்றடையும். அங்கிருந்து அரசடி வீதியூடாக நல்லூர் பின் வீதியை சென்றடை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அரசாங்கத்துக்கு தமிழ்ச்செல்வன் அவசர கடிதம்!

(கிளிநொச்சி)

அம்பாறையில் பெண் போராளிகள் மூவர் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வே அரசாங்கத்துக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்றிரவு அனுப்பிவைத்துள்ளார்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இந்தக் கடிதத்தில் – விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட அரசியற் பொறுப்பாளர்கள் தொடர்ச்சியாகக் கொல்லப்படுவது மற்றும் அவர்கள் மீதான படுகொலை முயற்சிக்கான துப்பாக்கிப் பிரயோகங்கள் சமாதான முயற்சிகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென அந்தக் கடிதத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

# போராளிகள் மீது தொடரும் தாக்குதல்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்!

## விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

படைத்தரப்பின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பெரும் பங்கம் விளைவிப்பதுடன் யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கும் பாரதூரமான விளைவையே ஏற்படுத்தும் என விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் சசிமதி, அகநிலா ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் கொக்கட்டிச்சோலையிலிருந்து தங்கவேலாயுதபுரத்தை நோக்கி முச்சக்கரவண்டியொன்றில் சென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகளை சுட்டவர் நேற்று கைதுசெய்யப்பட்டார்!

(மட்டககளப்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட 3 பெண் போராளிகள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் பெரிய கல்லாற்றைச் சேர்ந்த பிரதீபன் எனப்படும் ஜோண்சன் ஜெயகாந்தன் (வயது– 28) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளால் தெரிவிக்கப்பட்ட தகவலொன்றின் பேரில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி சுனாமி அகதி முகாமில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினரால் இவர் கைது செய்யப்பட்டு கல்முனை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

தற்போது இந்த நபர் மேலதிக விசாரணைக்காக திருக்கோவில் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள் ளார்.

சில வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட இவர், சில காலம் ராசிக்குழுவில் இணைந்து செயற்பட்டதாகக் கூறப்படுகிறது.

## புலிகள் மீதான தாக்குதல்கள்; விசாரணைக்கு ஆணைக்குழு!

(கொழும்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை நடத்த ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓய்வுபெற்ற இரண்டு நீதியரசர்களைக் கொண்ட விசாரணைக் குழுவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்துக்குள் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்த ஆணைக் குழுவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### அலுவலகத்தில் பார்வையிடலாம்!

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அரசாங்க தமிழ்மொழி பாடசாலைகளில் ஆசிரிய சேவையில் 3 II வகுப்புக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையின் மூலம் தெரிவாகிய ஆசிரிய நியமனம் பெறுவோரில் 607 பேரின் விபரங்களை நமது ஈழநாடு அலுவலகத்தில் இன்று காலை 10 மணிமுதல் பார்வையிடலாம்.

## பெண் போராளிகள் இருவர் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை ஆயுதக் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த விடுதலைப் புலிகளின் இரண்டு பெண் போராளிகளும் நேற்றிரவு அவசர சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.


கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான அனுமதியை அரசாங்க சமாதான செயலகம், கிளிநொச்சி சமாதான செயலகத்திற்கு வழங்கியதை அடுத்தே இவர்கள் நேற்றிரவு விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு – அம்பறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி மற்றும் துணைப் பொறுப்பாளர் சசிமதி ஆகியோரே கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இன்னொரு பெண் போராளியான அகநிலா ஹெலிகொப்ரரில் இட

(12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



எதிரியா பிரகடனம் செய்ய அமெரிக்கா எண்ட நினைப்போ இவைக்கு...!

## நோர்வே அரசாங்கத்தை எதிரியாக பிரகடனம் செய்வோம்; ஜாதிக ஹெல உறுமய மிரட்டல்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்குநோர்வே அரசு தொடர்ந்தும் ஆதரவளித்து வருவதால் அந்த நாட்டைத் தாம் இலங்கையின் எதிரியாகப்பிரகடனம் செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலிலுள்ள நிலையில் விடுதலைப் புலிகள் திரும்பத் திரும்ப வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு நோர்வே எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதியாக இருந்து வருகிறது. எனவே, ஜாதிக ஹெல உறுமய மேற்கண்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் மூன்றாம் ஆண்டு நிறைவில் விடுதலைப் புலிகள் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் கடுங்காயத்துக்கு இலக்கானார்.

கடந்த மூன்று வருட போர் நிறுத்த காலத்தில் 600 இலங்கையர்களை விடுதலைப் புலிகள் படுகொலை செய்துள்ளனர். 5000 தடவைகளுக்கு மேல் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். சிறுவர்களை தமது அமைப்பில் இணைத்து வருகின்றனர். ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளைக் கொண்டுவருகின்றனர். அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியர் நியமனம் பெறுவோரின் விபரம்

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்க தமிழ் மொழிப் பாடசாலைகளில் ஆசிரியர் சேவையில் 3II வகுப்புக்கு நிலவிவரும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவாகி ஆசிரிய நியமனம் பெறுவோரின் விபரங்களை மாகாண கல்வி அமைச்சு வலய கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

தென்மராட்சி, வலிகாமம், மன்னார், வடமராட்சி, முல்லைத்தீவு வலயங்களில் நியமனம் பெறும் ஆசிரியர்களின் விபரம் வருமாறு :-

## தென்மராட்சி வலயம்

### உள்நாட்டு நன்னீர் உயர் தொழில்நுட்பம்

பரமலிங்கம் மாலதி – கரணவாய் தெற்கு, கரவெட்டி (வரணி மகா வித்தியாலயம்), கிருஸ்ண பிள்ளை பிரபாநந்தினி – குடத்தனை மேற்கு, குடத்தனை (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கந்தையா பிரபாலோஜினி – பருத்தித்துறை வீதி, கொடிகாமம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

## வலிகாமம் வலயம்

### உள்நாட்டு நன்னீர் உயர் தொழில்நுட்பம்

அருமைத்துரை பிரேமதாஸ் (சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம்), இராமச்சந்திரன் சிவதர்சினி (ஸ்கந்தவரோதயா கல்லூரி), அருணாசலம் சுதர்சினி (மானிப்பாய் மெமோறியல்).

## மன்னார் வலயம்

### உள்நாட்டு நன்னீர் உயர் தொழில்நுட்பம்

சின்னராசா கபிலன் (அரிப்பு றோ.க.த.க பாடசாலை), நவரட்ணம் ஜெயக்காந்தன் (சென். லோறன்ஸ் பாடசாலை).

### சித்திரம்

காதர் முகைதீன் முகமட் அக்ரம் (எழுத்தூர் றோ.க.த.க பாடசாலை), சுலைமான் லெப்பை பறிசா – புதுக்குடியிருப்பு (அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை ).

### உடற்கல்வி

அம்புருஸ் கருஸ் பெனற்குருஸ் – எருக்கலம்பிட்டி (எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்திலாயம்)

### கணிதம்

சபருல்லா முகமது அக்ரம் (சிலாவத்தை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை).

### ஆரம்பக்கல்வி

நாகேஸ்வரி வைரமுத்து (முள்ளிக்குளம் றோ.க.த.க பாடசாலை), கனுசியா அப்துல் ராசிக் (தலைமன்னார் அ.மி.த.க பாடசாலை), பாத்திமா பேகம் பதியுதீன் (சிலாவத்துறை அ.மு.த.க பாடசாலை), நசிகா அப்துல் சமது (எருக்கலம்பிட்டி கிழக்கு அ.த.க பாடசாலை), சுபராஜா பிறேமிலா (முசலி மகா வித்தியாலயம்), யுஸ்லியா பர்தியஸ்லி (எருக்கலம் பிட்டி மகளிர் கல்லூரி), மேரி சுஜாத்தா ஜோன்சன் (அரிப்பு றோ.க.த.க பாடசாலை), வர்பானா முகமது காலித் (தலைமன்னார் அ.மு.த.க பாடசாலை), லிசா அந்தோனி (முள்ளிக்குளம் அ.த.க பாடசாலை), முகமது முஸ்லிம் ராஜா முகமது (அளவக்கரை அ.த.க பாடசாலை), யலிசா ஓசன் சாகிபு (மன்னார் முஸ்லிம் மகா வித்தியாலயம்).

### ஆங்கிலம்

ஜலால்தீன் முகமது சிராப் (எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம்), சேகு ஹுசைன் முகமது சிகார் (புதுக்குடியிருப்பு அ.த.க பாடசாலை), அகமது கபீர் முகமது அஸ்வர் (எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயம்).

## வடமராட்சி வலயம்

### உள்நாட்டு நன்னீர் உயர் தொழில்நுட்பம்

கந்தசாமி சிவனேசன் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), விசுவலிங்கம் மன்மதகுமார் (மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), அந்தோனிப்பிள்ளை மேரிராதிக்கா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை), கற்பகநாயகம் ஒபீக்கா (விக்னேஸ்வரா கல்லூரி), சின்னக்கிளி சுயாத்தா (தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளையார் மகா வித்தியாலயம்), வெற்றிவேலு கலாநிதி (செம்பியன்பற்று அ.த.க பாடசாலை), கிருஷ்ணமூர்த்தி வாணி (வல்வை மகளிர் வித்தியாலயம்), ஆனந்தசிவம் சிவந்தினி (சிதம்பரக் கல்லூரி), சுவாம்பிள்ளை அற்புத செல்வநாயகி (நாகர் கோவில் அ.த.க பாடசாலை).

### உடற்கல்வி

கனகரத்தினம் கார்த்திகா (உடுத்துறை மகா வித்தியாலயம்), மரியாஸ் மெடோனா (வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), செல்வரத்தினம் மடோனா (செம்பியன்பற்று அ.த.க பாடசாலை), போகீந்திரன் ரேவதி (செம்பியன் பற்று அ.த.க பாடசாலை)

### ஆரம்பக்கல்வி

விஜயசொரூபி வேலாயுதபிள்ளை (உடுத்துறை மகா வித்தியாலயம்), புனிதகௌரி பேரின்பநாதன் (உடுத்துறை மகா வித்தியாலம்), கேசினி பூபாலசிங்கம் (குடத்தனை கரையூர் றோ.க.த.க பாடசாலை), சாமினி மரியரட்ணம் (ஆழியவளை சீ.சீ.ரீ.எம் பாடசாலை), செந்துமதி சிவபுண்ணியம் (மருதங்கேணி எச்.ரீ.எம். பாடசாலை), புஸ்பவேணி வீரமுத்து (மருதங்கேணி எச்.ரீ.எம். பாடசாலை), குமுதினி முருகையா (மருதங்கேணி எச்.ரீ.எம் பாடசாலை), ஹாஜத்திரி இராசதுரை (தாழையடி றோ.க.த.க பாடசாலை), சிவச்செல்வி கந்தப்பசேகரம் (கேவில் அ.த.க பாடசாலை), பிருந்தா வனிதை நடராசா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), ஹேமவர்த்தனி நடராசா (கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை) சரோசினி தவமணி (கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை) மோகனவதனி தியாகராசா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), சுவர்ணா கதிரேசன் (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), கனிதா கணேஸ் (வெற்றிலைக்கேணி றோ.க.த.க பாடசாலை), தர்சினி சங்கரப்பிள்ளை (மணற்காடு அ.த.க பாடசாலை), பிரபாஜினி தவரத்தினம் (குடத்தனை கரையூர் றோ.க.த.க பாடசாலை), ஜெயறூபி நல்லையா (மருதங்கேணி எச்.ரீ.எம் பாடசாலை), சுஹாசினி சிவானந்த நடராஜா (ஆழியவளை எச்.ரீ.எம் பாடசாலை), சீதா முருகேசு (உடுத்துறை மகா வித்தியாலயம்), தயாநிதி மயில்வாகனம் (செம்பியன்பற்று அ.த.க பாடசாலை), ஞானசவுந்தரி ஞானசுந்தரம் (கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை) ஆனந்தகலா தர்ஷனி (தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம்), சுதர்ஜினி புஸ்பராஜா (செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை), கலைச்செல்வி சின்னத்தம்பி (தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை), சந்தனா பத்மநாதன் (தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை).

### ஆங்கிலம்

விமலினி குகராஜன் (ஆழியவளை சீ.சீ.த.க பாடசலை), ஸ்ரீ பத்மப்பிரியா கோபால கிருஷ்ண ஐயர் (செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலை), சுபாங்கி சீவரத்தினம் (தாளையாடி றோ.க.த.க பாடசாலை), நித்திலா ஆனந்த மகேஸ்வரன் (கேவில் அ.த.க பாடசாலை), மோகனா பேரம்பலம் (கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை), ஹம்சானந்தி கருணாமூர்த்தி (வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்), டர்சினி மகிந்தன் (மாமுனை அ.த.க பாடசாலை).

## முல்லைத்தீவு வலயம்

### நடனம்

இராசமணி சுதர்சினி (வற்றாப்பளை மகா வித்தியாலயம்), சதாசிவம் திருச்செந்தூரன் (கலைமகள் வித்தியாலயம்), வசந்தராசா இன்பநிதி (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), பற்குணராசா ஜீவாஜினி (தண்ணீரூற்று இந்துசபை த.க பாட சாலை)

### உள்நாட்டு நன்னீர் உயர் தொழில்நுட்பம்

வரதலிங்கம் ரமணசுதன் (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), சிங்கராசா அல்பன் வசந்தரூபன் (இரணைப்பாலை றோ.க.த.க பாடசாலை), பாக்கியநாதன் கமலக்கண்ணன் (வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம்), நடராசா நந்தினி (விசுவமடு மகா வித்தியாலயம்), அருளானந்தம் அருள் ஜெயரட்ணம் (செம்மலை மகா வித்தியாலயம்), சந்திரமோகன் ஜெகதீஸ்வரி (உடையார்கட்டு மகா வித்தியாலயம்)

### சித்திரம்

சிவபாதசேகரம் கோபாலன் (செம்மலை மகா வித்தியாலயம்), சின்னையா முத்துக்குமார் (குமிழமுனை மகா வித்தியாலயம்)

### உடற்கல்வி

தனபாலசிங்கம் ராதாகிருஷ்ணன் (விசுவமடு மகா வித்தியாலயம்), அழகர்சாமி தம்பிராசா (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), விக்னேஸ்வரன் பாலசேந்தன் (வள்ளிபுனம் அ.த.க பாடசாலை), கனகரத்தினம் சசிக்குமார் (இரணைப்பாலை அ.த.க பாடசாலை), நவராசசிங்கம் சுரேஸ்குமார் (பாரதி வித்தியாலயம்), பாலசுந்தரம் ஜெயரூபன் (கலைமகள் வித்தியாலயம்), முத்தையா காந்தசெல்வன் (குமிழமுனை மகாவித்தியாலயம்), பொன்னம்பலம் ரஜிந்தன் (செம்மலை மகா வித்தியாலயம்), சின்னத்துரை வசந்தகுமார் (புதுக்குடியிருப்பு றோ.க.த.க பாடசாலை), ஜெயலிங்கம் ஜெயகாந்த் (சீ.சி.வித்தியாலயம்), சரவணை சுவேந்திரன் (விக்னேஸ்வரா வித்தியாலயம்), சுந்தரலிங்கம் கஜேந்திரன் (முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்), சுப்பிரமணியம் சிறிதரன் (செம்மலை மகா வித்தியாலயம்), பாலேந்திரன் சசிகரன் (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க பாடசாலை), விநாயகமூர்த்தி ஐங்கரன் (அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம்).

### சங்கீதம்

ஸ்ரனிஸ்லாஸ் டிலோஜினி (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க பாடசாலை), தர்மலிங்கம் ஜெயசூரியா (உடுப்புக்குளம் தமிழ் மகா வித்தியாலயம்).

### கணிதம்

இராமநாதன் ரமேஸ் (குமிழமுனை மகா வித்தியாலயம்), அன்ரனி கிறேசியன் புஸ்பராசா (குமிழமுனை மகா வித்தியாலயம்), அமிர்தலிங்கம் வட்சலன் (குமிழமுனை மகா வித்தியாலயம்), ரங்கநாதன் பகீரதி (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்), செல்வராசா ஜெயசீலன் (விசுவமடு மகா வித்தியாலயம்), செல்லையா ஜெயராசா (கலைமகள் வித்தியாலயம்), இரத்தினம் ரமணி (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), தர்மகுலம் சுமன் (முல்லைத்தீவு றோ.க.த.க பாடசாலை), சுந்தரம் ஜெகதீசன் (வற்றாப்பளை மகா வித்தியாலயம்), சிவதாஸ் பிரசாத் (புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்).

### விஞ்ஞானம்

சதாசிவம் வசீதரன் (வற்றாப்பளை மகா வித்தியாலயம்), பரமசாமி நிசாயினி (இரணைப்பாலை மகா வித்தியாலயம்).

### ஆரம்பக்கல்வி

மதுப்பிரியா பிரபாகரன் (சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்), கணேசமூர்த்தி உதயசீலன் (சுதந்திரபுரம் அ.த.க பாடசாலை), சிவகுரு இரத்தினஜோதி (செம்மலை மகா வித்தியாலயம்), செபஸ்தியாம்பிள்ளை அன்ரனி ஜோர்ஜ் (கலைமகள் வித்தியாலயம்), மணியம் காந்தரூபன் (தேவிபுரம் அ.த.க பாடசாலை), செல்வராசா மதனரூபன் (இரணைப்பாலை மகா வித்தியாலயம்), சின்னையா இராசரத்தினம் (குரவில் தமிழ் வித்தியாலயம்), வசந்தமலர் பாலசுப்பிரமணியம் (தண்ணீரூற்று பாடசாலை).

### ஆங்கிலம்

சிறில் அன்ரன் ஜெயராஜ் (அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம்), மலர்ச்செல்வி கோபாலசிங்கம் (கொக்கிளாய் அ.த.க பாடசாலை), ஜெயந்தி இலங்கநாதன் (சுப்பிரமணிய வித்தியாலயம்), ஜேசுதாசன் பிரேமதாஸ் (கொக்குத்தொடுவாய் அ.த.க வித்தியாலயம்).

## சண்டிலிப்பாய் கோட்ட மெய்வல்லுனர் போட்டி

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் கோட்டத்தின் இந்த ஆண்டுக்கான மெய்வல்லுனர் போட்டி நாளை பி.ப. 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (69)

## விக்ரோறியா கல்லூரிக்கு நூலகம் அமைக்க உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நேற்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தப் பாடசாலைக்குச் சென்றிருந்த இவர் – பாடசாலையைப் பார்வையிட்டதுடன், பாடசாலையின் குறை நிறைகளையும் கேட்டறிந்தார்.

இந்தப் பாடசாலைக்கு புதிய இடத்தில் நூலகம் ஒன்றை விரைவில் தான் அமைத்துத் தருவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார். (207)

## சட்டவிரோத மின்பாவனையாளர்கள் சுழிபுரத்தில் பிடிபட்டனர்!

சுழிபுரம் பகுதியில் சமுத்திரா முகாம் பகுதியில் நேற்றிரவு பல சட்டவிரோத மின் இணைப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நேற்றிரவு 8 மணிக்கு இந்தப் பகுதிக்குச் சென்ற மின்சாரசபை ஊழியர்களும், பொலிஸாரும் சட்டவிரோத இணைப்பு உபகரணங்களையும், சட்டவிரோத பாவனையாளர்களையும் கைதுசெய்தனர். (207)








நிறைஞ்சனாஸ் சங்கானை
பரத், சந்தியா மற்றும் பலர் நடித்த
காதல்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)






# அரச, அரசசார்பற்ற நிறுவனங்களை எதிர்பாராது எமது சொந்தக் காலில் நாம் முன்னேற வேண்டும்

## மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் - சகல வளங்களும் பொருந்திய மாவட்



டம். இந்த மாவட்டத்திலுள்ளவர்கள் வறுமையில் வாடக்கூடாது. அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்யும் உதவிகளை நாம் எதிர்பார்க்காது, எமது சொந்தக்காலில் நாம் முன்னேற வேண்டும் என, மட்டு-அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

மட்டக்களப்பு பன்சேனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தியாக தீபம் திலீபன் மருத்துவமனை திறப்புவிழா நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வருங்காலச் சந்ததி வாழ வேண்டுமென்பதற்காக 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளை இழந்திருக்கிறோம். பல நெருக்கடிச் சூழலைச் சந்தித்திருக்கிறோம். அப்போது எல்லாம் கவசமாக இருந்த தமிழீழ மக்கள் என்றும் மதிப்புக்குரியவர்கள்.

விடுதலைப் போராட்டம் - மக்களுக்காகவே. மக்களின் மேம்பாடு கட்டுமானங்கள் சரியாக நடைபெற வேண்டும். நிர்வாகக் கட்டமைப்பு அலகுகளை விரிவுபடுத்தி, அவர்களுக்கு உதவிகள் சென்றடைய வேண்டும் என்பது எமது தலைவரது எண்ணம்.

இந்த மருத்துவமனையை இங்கு குறுகிய காலத்துள் கட்டி முடிப்பதற்கு, இங்குள்ள மக்களின் பலமான சக்தி பிரயோகிக்கப்படுகிறது. என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கடந்த 1992 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இந்தப் பிரதேசத்தில் மக்களுடன் இருந்திருக்கிறேன். இன்று அவர்களின் நிலைமைகளை அவதானிக்கும்போது, அவர்களது வாழ்க்கையை முன்னேற்ற வேண்டியுள்ளது. எனவே சில திட்டங்களை நடைமுறைப் படுத்தி, செயல் வடிவாக்கும் போது, வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியும். இதனால் வறுமையைப் பிடியிலிருந்து மீளமுடியும்.

இதற்காகப் பல திட்டங்களை அறி முகப்படுத்தி செயற்படுத்தவுள்ளோம். எனவே நீங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பேபி - 81 குழந்தை அமெரிக்கா பயணம்

கல்முனையைச் சேர்ந்த சுனாமி பேபி - 81 எனப்படும் ஜெயராஜா அபிலாஷ் என்ற 5 மாதக் குழந்தை, நேற்று அதிகாலை தனது பெற்றோருடன் அமெரிக்கா பயணமாகியது.

அமெரிக்கத் தொலைக்காட்சியான ஏபிசி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள குட்மோனிங் அமெரிக்கா என்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே இந்தக் குழந்தை அமெரிக்கா சென்றுள்ளது.

இரண்டுவார காலம் அபிலாஷ் - தனது பெற்றோருடன் அமெரிக்காவில் தங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கம் வீழ்ச்சியடையாது; அடித்துக் கூறுகிறார் அனுரா!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஒருபோதும் வீழ்ச்சியடையாது என்று அனுர பண் டாரநாயக்க தெரிவித்தார்.

கம்பஹாவில் மாகாண சபை அமைச்சர்கள், பிரதேச சபை அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பாதுகாப்பதில் ஜே.வி.பியினருக்குப் பொறுப்பு உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியை அவரது பதவியில் இருந்து நீக்க பிடிவாதம் கொண் டிருக்கிறது. இந்தச் செயல் மக்கள் வழங்கிய அதிகாரத்தை மீறுவதாகும் என அவர் மேலும் தெரிவித் தார்.

# பேச்சுக்கள் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு!

## ஆளும் கூட்டணி தீர்மானம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் நிலவும் முரண்பாடுகளுக்கு, பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் நிலவும் முக்கியமான முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் விசேட சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தரப்பில் மங்கள சமரவீர, சுசில் பிறேம ஜெயந்த, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும், ஜே.வி.பியின் சார்பில் விமல் வீரவன்சவும் கலந்து கொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை அனுசரித்துச் செல்லவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

# குவேனி மீதான தாக்குதலை படையினரே நடத்தினர்!

## குயிலின்பன் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டு.அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீதான தாக்குதலை நடத்தியவர்கள் படையினரே என, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கொலையாளிகள் - அக்கரைப்பற்று படை முகாம் பக்கமாக இருந்து ஓட்டோவைத் தொடர்ந்து வந்து, தாக்குதலை நடத்திவிட்டு, முகாம் பக்கமாகவே தப்பிச் சென்றனர்.

குவேனிக்குப் பின்பு வந்த எமது போராளிகள் - சம்பவத்தைக் கண்டு, கொலையாளியைப் பின் தொடர்ந்தபோது, கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டிவிட்டு முகாம் பக்கமாகவே சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைக் கருணா குழு எனக்கூறி, படைத்தரப்பு தப்பிக்க முடியாது. ஏனெனில், கருணா கும்பலில் உள்ளவர்களை நாங்கள் இலகுவாக அடையாளம் காண்போம், இந்தக் கொலையாளி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதை, அவர் பேசிய மொழியே காட்டிவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பதுளை, மொனராகலைப் பகுதிகளில் பரவிவரும் மர்மமான இருதயநோய்!

## கட்டுப்படுத்த நடவடிக்கை

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பரவிவரும் மயோகாடிற்ஸ் எனும் ஒருவகை இருதய நோயைக்கட்டுப்படுத்த உலக சுகாதார அமைப்பு முன்வந்துள்ளது.

இந்த நோய் தொடர்பாக நிலைமையைக் கண்காணிக்க, உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட குழுவொன்று இலங்கைவரவுள்ளது.

இந்தக் குழுவில் - வைத்தியர்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும், இவர்கள் இந்த நோய் தொடர்பாக மருத்துவ ஆய்வையும் நடத்தவுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கான்ரன் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த நோயால் பதுளை அரசினர் வைத்தியசாலையில் மட்டும் 10 வைத்தியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதிலும் கண் சிகிச்சைப் பிரிவில் நான்கு வைத்தியர்கள் பாதிக்கப்பட்டதனால் அந்தப் பிரிவையே மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஊவா மாகாணத்தில் மட்டும் இந்த நோயால் இதுவரை 230 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை, அங்கு 25 சுகாதார ஊழியர்கள் இந்த நோய்த் தொற்றுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோய் ஏற்படுவதற்கான அறிகுறியாக நெஞ்சுவலி மற்றும் சுவாசிப்பதில் சிக்கல் போன்றவை காணப்படுமெனவும், இந்த நோய் மேலும் பரவாமல் தடுக்க சாத்தியமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



திருகோணமலை பள்ளத்தோட்டம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு திருமலை பொருண்மிய மதியுரைஞகத்தால் வழங்கப்பட்ட உபகரணங்களை நாடாளுமன்ற உறுப்பினர் துரை ரெட்ண சிங்கம் ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம். - படம்.சசிகுமார்.

### சட்டம் ஒழுங்கு மீதான

# அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் சட்டம், ஒழுங்கிற்கு மீண்டும் மீண்டும் ஏற்படுத்தப் படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராக அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என, ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டியுள்ளது.

எம்பிலிப்பிட்டிய நீதிமன்றில் இடம்பெற்ற குண்டு வீச்சில், 3 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 25 பேர் காயமடைந்தனர். எனவே அந்த நேரம் சட்டத்தைக் கடுமையானதாக நடைமுறைப் படுத்தியிருக்க வேண்டும். இது நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிமுறைகளுக்கு விடுக்கப்பட்ட பாரிய சவாலகும். நீதித்துறைக்கு, பாதாள உலகக் குழுவினரால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்தக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், இந்த அச்சுறுத்தல்களை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

அண்மைக் காலத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொல்லப்பட்டமையானது - நீதித்துறை எந்தவகையான அச்சுறுத்தலுக்குள் உள்ளாகியிருக்கிறது என்பது புலனாகிறது. அரசாங்கமும், பொதுமக்களும் பொருத்தமான அதிகாரிகளும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.

அரசாங்கமும், படைகளும் - நீதிமன்றத்துக்கும், நீதிமன்றப் பணியாளர்களுக்கும் தொடர்ந்தும் பாதுகாப்பை வழங்க வேண்டுமெனவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

### இராணுவ சிப்பாய் மரணம்

மட்டக்களப்பு சாராயத் தவறணைச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் நேற்று அதிகாலை வைத்தியசாலையில் மரணமானார்.

சுப்பிரமணியம் தயாநிதி எனப்படும் 46 வயதுடைய இந்த நபர், நேற்றுமுன்தினமிரவு 8.45 மணியளவில் ரயில் நிலைய வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இவருக்கு நெஞ்சில் துப்பாக் கிச்சூட்டுக் காயம் ஏற்பட்ட நிலையில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கல்லடி திருச்செந்தூரைச் சேர்ந்த இவர் - சுனாமி அனர்த்தத் தால் பாதிக்கப்பட்டு, அகதிமுகாமொன்றில் தங்கியிருந்தார். கொலையாளி இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புல்மோட்டையில் மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டையில் மீனவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நீர் கொழும்பு, சிலாபம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் புல்மோட்டைப் பிரதேசத்தை ஆக்கிரமித்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக தமது வாழ்க்கை பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதைக் கண்டித்தே, மீனவர்களால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை குறித்து பொலிஸாருக்குப் பல தடவைகள் முறைப்பாடு செய்தும் தகுந்த பரிகாரம் கிடைக்கவில்லை என்று புல்மோட்டை மீனவர்கள் தெரிவித்தனர்.

# மாகாண சபை வெற்றிடங்களை மத்திய அரசாங்கம் நிரப்பமுடியாது!

## முதலமைச்சர்கள் தீர்மானம்

(கொழும்பு)

மாகாண சபைகளில் காணப்படும்வெற்றிடங்களுக்கு மத்திய அரசாங்கம் நியமனங்களை மேற்கொள்ளமுடியாது எனவும்,

இந்த நியமனங்களை மறுப்பதற்கு மாகாண சபை முதலமைச்சர்கள் முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இரத்தினபுரியில் இடம்பெற்ற முதலமைச்சர்களின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி நிதியமைச்சோ அல்லது ஏனைய அமைச்சுகளோ மாகாணசபைகளின் விடயப் பரப்புக்குட்பட்ட துறைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கமுடியாது என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நிதியமைச்சின் கண்காணிப்பின்கீழ் வெளிநாட்டு நிதியுதவிகளை நேரடியாக மாகாண சபைகளுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

## நான்காவது ஒருநாள் போட்டியில்

# அவுஸ்ரேலியா ஏழு விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணியை தோற்கடித்தது



நியூஸிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று வெலிங்டனில் நடைபெற்ற நான்காவது போட்டியில் அவுஸ்ரேலியா 7 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்தைத் தோற்கடித்தது.

நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால் நியூஸிலாந்தின் பிளெமிங் - அஸ்ரில் ஜோடி களமிறங்கியது. இருவரும் இணைந்து 84 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பிளெமிங்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 53 பந்துகளில் ஒரு சிக்ஸர் 3 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.



இதனையடுத்து அஸ்ரிலுடன் கம்மிங் இணைந்தார். ஆனாலும் அணி 90 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 60 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த அஸ்ரில் ஆட்டமிழந்தார். இதன்பின் கம்மிங்குடன் மார்சல் இணைந்தார். எனினும் இந்த ஜோடியும் நிலைத்து நிற்கவில்லை.

இதில் கம்மிங் ஒரு பவுண்டரி உட்பட 10 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வந்த நியூஸிலாந்தின் விக்கெட்டுக்கள் அனைத்தும் சீரான வேகத்தில் வீழ்த்தப்பட்டு வந்ததனால் அந்த அணி 49.6 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களையே பெற்றது. இதில் பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்களில் மார்சல் 23, மக்மிலன் 35, கெயின்ஸ் 36, மக்கலம் 17 ஓட்டங்களை குறிப்பிடும்படியாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரட்லீ, மக்ரா, ஜிலெஸ்பி மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், கஷ்பரோவிச், ஹோப்ஸ், கிளார்க் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 234 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கில்கிறிஸ்ட், கடிச் ஜோடி களமிறங்கியது. இந்த இருவரது ஆட்டத்திலும் அனல் பறந்தது. இந்த ஜோடி தமக்கிடையே 78 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்ட நிலையில் 41 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த கடிச் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து மார்ட்டின் இணைந்தார். ஆனாலும் ஓட்ட அதிகரிப்பில் எவ்வித குறைவும் ஏற்படவில்லை. இந்த நிலையில் 37 பந்துகளில் ஒரு சிக்ஸர் 8 பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்ற கில்கிறிஸ்ட் அணி 118 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் மார்ட்டினுடன், சைமன் இணைந்தார். இந்த ஜோடியும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதில் 37 பந்துகளில் 3 சிக்ஸர், 4 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் சைமன்ஸ் ஆட்டமிழந்தார். அவ்வேளை அணி 212 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் பின்னர் மார்ட்டினுடன் கிளார்க் இணைந்தார். இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் முறையே 65, 10 ஓட்டங்களைப் பெற்றதால் அவுஸ்ரேலிய அணி 34.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் வில்சன், ஹெயின்ஸ் மற்றும் மக்மிலன் ஆகிய மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தற்போது அவுஸ்ரேலிய அணி 4:0 என்ற நிலையில் தொடரை வென்றுள்ளது. இறுதிப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நேப்பியரில் நடைபெறவுள்ளது.

நேற்றைய போட்டியில் அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங், பிரட்ஹொக் ஆகிய இருவரும் நியூஸிலாந்து அணியில் மைக்கல் பப்ஸ், டரல் ரபி மற்றும் டானியல் விற்றோரி ஆகிய மூவரும் ஆடவில்லை.

விளையாட்டு

# கடைசிவரை போராடுங்கள் வெற்றி உங்கள் காலடியில்!

## இம்ரான்கான் தெரிவிப்பு



(கராச்சி)

உறுதியான, சுறுசுறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இந்தியத் தொடரைக் கைப்பற்றுங்கள் என இந்தியத் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணிக்கு அந்நாட்டின் முன்னாள் ஜாம்பவான் இம்ரான்கான் ஆலோசனை கூறியுள்ளார்.

இந்திய அணியுடன் 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணி பங்கேற்கவுள்ளது. அதற்காக இன்சமாம் உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்தியா புறப்பட்டது.

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை கராச்சியில் அணி வீரர்களிடம் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார் முன்னாள் கப்டன் இம்ரான்கான்.

இதன்போது அவர் கூறுகையில் -

உறுதியான மனப்பான்மையாலும், பொறுப்பான ஆட்டத்தாலும் 1986 இல் எனது தலைமையிலான அணி இந்தியாவில் வெற்றிபெற்றது. தோல்வியைப் பற்றி நாங்கள் அப்போது கவலைப்பட்டதில்லை.

அப்போது நாங்கள் கொண்ட உறுதி, அர்ப்பணிப்பு உணர்வு, சாதிக்கும் வல்லமை ஆகியவற்றை நீங்களும் வெளிப்படுத்தினால் வெற்றி நிச்சயம் உங்கள் காலடியில்.

கடைசிவரை போராடும் உணர்வு வெற்றிக்கு மிகவும் அவசியம். இந்தியாவைக் காட்டிலும் மனோரீதியாக நீங்கள் வலுவானவர்கள். உங்களிடமுள்ள திறமை, நுணுக்கங்கள் மீது முதலில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். அப்போதுதான் வெற்றி கிட்டும். அணியாக விளையாடுவது அதைக் காட்டிலும் அவசியம்.


நாடுபெருமையடையும் விதமான ஆட்டத்தை நிச்சயம் வெளிப்படுத்துவீர்கள் என நம்புகிறேன் என்றார் இம்ரான்கான்.

இதேவேளை, இம்ரான்கானின் பேச்சு எதிர்வரும் இந்தியத் தொடருக்கு மிகவும் ஊக்கமாக இருக்குமென பாகிஸ்தான் அணிக் கப்டன் இன்ஸமாம் தெரிவித்தார்.

அவருடைய பேச்சு நிச்சயம் வீரர்களுக்குப் புத்தாக்கம் அளித்திருக்கும் என நம்புகிறேன். அவர் கூறிய ஆலோசனைகள் போதும் இனி[illegible] எல்லாம் எங்களிடம்தான் உள்ளன.

யூனில் நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான தொடர் போட்டியினால் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றைக் காட்டிலும் இந்தியத் தொடரில் வெளிப்படுத்த வேண்டியது குறித்து வீரர்கள் அதிகம் சிந்திக்கவேண்டியுள்ளது. அடுத்த 50 தினங்கள் வீரர்கள் பலரின் கிரிக்கெட் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான தினங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சதுரங்கப் புதிர்



தொகுப்பு - சி. ஸ்ரீத்தியாதரன்.

இன்றைய கேள்வி:

வெள்ளை Check Mate ஆக்காமல் இருப்பதற்கு கறுப்பு செய்யவேண்டிய நகர்த்தலைத் தொடர்ச்சியாகத் தருக.

(விடை நாளை)

நேற்றைய கேள்விக்கான விடை:

1... $RXC_3$! 2 $BXC_3$ நகர்த்தினால் 2 ... $NXC_4^+$ கறுப்பு தனது ஒ[illegible] Rook இற்கு வெள்ளையினது Bishop இனையும் Knight இனையும் வெட்டி எடுப்பதன் மூலம் வெற்றியடைகின்றது.

# முதல் சுற்று ஆட்டத்தில் சானியா மிர்ஷா வெற்றி!



துபாய் ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல்சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா வெற்றிபெற்றார்.

நேற்றுமுன்தினம் நடந்த துபாய் ஓபன் ரெனிஸ் போட்டியில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா, குரோஷிய நாட்டு வீராங்கனை ஜெலினா கோஸ்தானிக்கை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை 6:7 என இழந்த சானியா உத்வேகத்துடன் ஆடி அடுத்த 2 செட்களை 6:4, 6:1 எனக் கைப்பற்றி வெற்றிபெற்றார்.

சானியா இரண்டாவது சுற்றில் ரஷ்ய வீராங்கனை ஸ்வெட்லானா குஸ்னெட்சோவாவை எதிர்த்து விளையாடவிருக்கிறார். ஸ்வெட்லானா உலக ரெனிஸ் தர வரிசையில் 6 ஆவது இடத்திலுள்ள வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரெட்லீக்கு ஆதரவாக - பொண்டிங், பிளெமிங்!

பந்து வீச்சுப் பிரச்சினையில் பிரெட்லீக்கு அவுஸ்ரேலிய அணித் தலைவர் பொண்டிங், நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஒக்லாந்தில் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியில் பிரெட்லீயின் பந்துவீச்சு குறித்து சர்ச்சை எழுந்தது. இவரது பீமர் (புல்டோஸ் முறையில் துடுப்பாட்ட வீரரின் தலையளவுக்கு வீசுவது) வகைப் பந்துவீச்சில் நியூஸிலாந்தின் மக்கலம் நிலைகுலைந்து போனார். இந்த முறையில் தொடர்ந்து பந்து வீசினால் வழக்கு தொடுக்கப்படும் என, நியூஸிலாந்து பயிற்சியாளர் ஜோன் பிரெஸ்வெல் எச்சரித்தார்.

பிரட்லீயை அணியில் இருந்து நீக்கவேண்டும் என விமர்சனங்கள் எழுந்தன. இப்படிப் பல்வேறு தரப்பிலும் எதிர்ப்புக் கிளம்பியபோதும் அவுஸ்ரேலிய அணித் தலைவர் பொண்டிங் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். இவர் கூறுகையில் பிரெட்லீ வேண்டுமென்றே தவறாகப் பந்து வீசுவதில்லை. மணிக்கு 150 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுகிறார். இதனால் கொஞ்சம் கால் தடுமாறினாலும் சிறிய அளவில் தவறு நேர்ந்துவிடுகிறது. வரும் போட்டிகளில் பீமர் முறையில் பந்து வீசுவதை பிரட்லீ தவிர்க்கவேண்டும் என்றார்.

நியூஸிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் இதுகுறித்து கருத்துக் கூறுகையில் - பிரெட்லீ அதிவேகமாகப் பந்துவீசக் கூடியவர். இவரைப் போன்றவர் எங்கள் அணியில் இருந்தால் அதிவேகமாகப் பந்துவீசி எதிரணி துடுப்பாட்ட வீரர்களை திணறடிக்கச் சொல்வோம். எனவே லீ பந்து வீச்சுத் தொடர்பாக சர்ச்சை கிளப்புவது தேவையற்றது என்றார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தியாவில் உற்சாக வரவேற்பு!

(புதுடெல்கி)

இந்தியாவில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடர்களில் பங்கேற்பதற்காக பலத்த பாதுகாப்புக்களுக்கிடையே பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் நேற்றுமுன்தினம் டெல்கிக்குச் சென்றனர்.


இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பாகிஸ்தான் குழுவுக்கு இந்திய கிரிக்கெட் சபை சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்திய கலாசாரப்படி மாலை அணிவித்து இன்சமாம் உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் வீரர்கள் வரவேற்கப்பட்டனர்.

சிறிதுநேரம் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்குப் பின்னர், சிறப்பு ஆடம்பரப் பேரூந்தில் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு வீரர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ரானா நவீட் உல் ஹசன் மற்றும் அப்துல் ரசாக் ஆகியோர் குடும்பத்துடன் இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 6 ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளது. அதற்காக இந்தியாவில் 50 நாட்கள் தங்கவுள்ளனர்.



முதல் டெஸ்ட் போட்டி மொகாலியில் வரும் 8 முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. அதற்கு முன்னதாக தர்மசாலாவில் நாளை முதல் 5 ஆம் திகதிவரை 3 நாள் ஆட்டத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபைத் தலைவர் அணியுடன் பாகிஸ்தான் அணி விளையாடவுள்ளது.

அணி விபரம் :

இன்சமாம் உல் ஹக் (அணித் தலைவர்), யூனுஸ் கான் (துணைத் தலைவர்), தௌபீக் உமர், சல்மான் பட், யாசிர் ஹமீட், யூசுப் யுகானா, ஆசிம் கமால், சொகைப் மாலிக், கம்ரன் அக்மல் (விக்கெட் காப்பாளர்), அர்ஷத் கான், டனேஷ் கனேரியா, ஷாஹிட் அப்ரிடி, ரானா நவீட் உல் ஹசன், முகமட் சமி, முகமட் கலீல், அப்துல் ரசாக்.

34. காற்றினால் பரம்பலடையும் வித்துக்கள் பாரமற்றவை. ( )
35. கப்பி ஓர் இலகு பொறியாகும். ( )
36. இந்திய விடுதலைக்காக பாடுபடாத பெரியார் மகாத்மா காந்தி ( )
37. மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை 37 C ஆகும். ( )

பின்வரும் தமிழ் சொற்களை (ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி) ஆங்கில மொழியில் எழுதுக.

38. நண்பன் : ........................
39. ஏழு : ........................
40. புத்தகம் : ........................
41. பச்சை : ........................

பின்வரும் தமிழ்ச் சொற்களை ( சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி) சிங்கள மொழியில் எழுதுக

42. தம்பி : ........................
43. பேனை : ........................
44. கதிரை : ........................
45. எட்டு : ........................

பின்வரும் இரு வாக்கியங்கள் உள்ளன. அவற்றை கருத்துத் தொடர்புடைய ஒரு வாக்கியமாக இணைத்து எழுதுக.

46. பாலன் எவருடனும் ஒன்றும் பேசவில்லை
அவன் அமைதியாக இருந்தான்.
........................................................

47. ரேகா பாட்டுப் பாடினாள்
கௌரி பாட்டுப் பாடினாள்.
........................................................

48. தைப்பொங்கல் தை முதல் நாளில் வரும்.
அதனை உழவர்கள் கொண்டாடுவர்.
........................................................

பின்வரும் சொற்களுள் பொருத்தமானதைத் தெரிவு செய்து பந்தியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(விளக்கு, மின்னோட்டத்தைக், சூடு, மின்விளக்கைச், பிரகாசம், காற்றை, மெல்லிய, நீடிக்கவில்லை, பொருத்தினார், இழை)

தோமஸ் அல்வா எடிசன் ஒரு (49).................... செய்ய முயன்றார். கண்ணாடி குமிழ் ஒன்றில் இருந்த (50) .................... அகற்றினார். அதனுள்ளே (51) .................... கம்பி இழை ஒன்றைப் (52) .................... அந்த இழையின் ஊடே (53)............செலுத்தினார். இழையிலே (54).................... ஏறியது அது பிரகாசித்தது. ஆனால் அந்தப் (55)............ நெடு நேரம் (56).................... சிறிது நேரத்திலே (57) .................... உருகியது. பின்னர் (58)........ அணைந்து விட்டது.

பின்வரும் தாவர வகைகளை அட்டவணைப்படுத்துக.

(கத்தரி, தென்னை, குப்பைமேனி, பாகல், வாழை, புடோல், முடக்கொத்தான், துளசி, மா, பனை, மிளகாய், பூசினி, வெண்டி, பயற்றங்காய், தேங்காய் பூடு)

| | மரங்கள் | செடிகள் | கொடிகள் | பூண்டுகள் |
|---|---|---|---|---|
| 59. | | | | |
| 60. | | | | |
| 61. | | | | |
| 62. | | | | |

பின்வரும் படத்தை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.




63. இதன் பெயரென்ன?
........................................................

64. இலக்கம் 1,2,3 ஐப் பெயரிடுக?
........................................................

65. வீசும் காற்று எதனூடாகச் செல்கிறது?
........................................................


நான் பங்கு பற்றிய விளையாட்டுப் போட்டி என்ற தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலையுடன் நான்கு சொற்களுக்கு குறையாத ஆறு வாக்கியங்கள் எழுதுக.

66. ........................................................
67. ........................................................
68. ........................................................
69. ........................................................
70. ........................................................
71. ........................................................

பின்வரும் தமிழை ஆங்கில எழுத்துக் குறியீடுகளுடன் திருப்பி எழுதுக.

72. 35 மில். லீற்றர் ........................................
73. 200 கிலோ மீற்றர் ........................................
74. 850 கிலோ கிராம் ........................................


75. கிருஷாந்தன் படத்திலுள்ளவாறு உருவொன்றை முற்றத்தில் வரைந்து 0 ஆம் இலக்கக் கூட்டில் தொடங்கி இரு கூடுகளைத் தாண்டி முன்னாள் உள்ள கூட்டுக்குப் பாய்ந்து பின் பின்னால் உள்ள கூட்டுக்குள் பாய்கின்றான். இவ்வாறு அவன் தொடக்கத்திலிருந்து முன்னாலும் பின்னாலும் பாய்ந்த சில கூடுகளின் இலக்கங்கள் 3, 2, 5, 4, 7, 6 இதற்கேற்ப கிருஷாந்தன் 6 ஆவது தடவை முன்னால் பாயும் கூட்டின் இலக்கத்தை எழுதுக.




T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

01 தொடக்கம் 05 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள வாக்கியத்தில் புள்ளிக் கோடிட்ட பகுதியை நிரப்புவதற்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிந்து எழுதுக.

1. ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருப்பவன் .................... .................... ஆவான்.
(உழைப்பாளி, உளைப்பாளி, உலைப்பாளி, உழைப்பாழி)


2. .................... பயன்படுத்தி கட்டடங்கள் கட்டப்படுகின்றன.
(சென்கற்களை, செங்கல்களை, செங்கற்களை, சென்கற்களை)

3. சித்தார்த்தர் .................... அன்பு உடையவர்.
( உயிர்கழிடத்தில், உயிர்களிடத்தில், உரிர்களிடத்தில், உயிரிடத்தில்)

4. உருடப்பிறப்பு முதலிய திரு நாட்களில் .................... க் கடைகளுக்கு
(பிடவை, புடைவை, புடவை, பிடவை)


5. தொழிலாளி .................... ஆக பணம் பெற்றுச் சென்றான்.
(கைமாத்து, கைம்மாற்று, கம்மாத்து, கைமாற்று)

கீழ் உள்ள படத்தின் நிழற்றப்படாத பகுதியின் பின்னம் பின்வருவனவற்றில்


6. 

1. 5/12 2. 7/12
3. 6/12 4. 8/12

வெற்றிடங்களில் பொருத்தமான காசுத்தாளை எழுதுக.


7. 


8. இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது



1. கூம்பகம் 2. கூம்பு 3. அரியம் 4. உருளை

9. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் சமச்சீர் வடிவமல்லாத உருவம் எது அதன் கீழ் கீறிடுக.



உரு 1 உரு 2 உரு 3 உரு 4

10. 1 ஆவது கோலத்திற்கேற்றவாறு 2 ஆவது கோலத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(8) - [9] - (72) - (12) - [84]
(......) - [9] - (63) - [5] - (......)

பின்வருவனவற்றில் சரியான விடையின் கீழ் கோடிடுக.

11. மரக்கிளைகளை வாழும் இடமாகக் கொள்ளாதது.
1. காகம் 2. வௌவால் 3. நாரை 4. மரங்கொத்தி

12. கூடு அமைக்கத் தெரியாத பிராணி
1. தேனீ 2. தூக்கணாங்குருவி 3. குயில் 4. மைனா

13. இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் அல்லாதது.
1. அநுராதபுரம் 2. பொலநறுவை
3. யாழ்ப்பாணம் 4. மகரகம

14. அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று
1. டெங்கு 2. கசம் 3. வாந்திபேதி 4. புற்றுநோய்

15. அதிகமக்கள் பிரயாணம் செய்ய உதவும் வண்டி
1. மாட்டுவண்டி 2. பஸ்வண்டி
3. மோட்டார்வண்டி 4. புகைவண்டி

16. தலைகீழாகத் தொங்கிக்கொண்டு உறங்குவது எது?
1. ஆந்தை 2. வௌவால் 3. குயில் 4. கிளி

17. சூரியனைச் சுற்றியுள்ள ஒன்பது கோள்களுள் மிகச் சிறிய கிரகம் எது?
1. வியாழன் 2. சனி 3. புதன் 4. சுக்கிரன்

18. ஒளிபுகக்கூடிய தோலுடைய விலங்கு
1. மண்புழு 2. ஓணான் 3. மனிதன் 4. நத்தை

19. இலங்கையின் தேசியப்பறவை
1. மயில் 2. புறா 3. காட்டுக்கோழி 4. கோழி

20. விரைவில் ஆவியாகக்கூடிய திரவம் எது?
1. நீர் 2. தேங்காய் எண்ணெய்
3. மண்எண்ணெய் 4. பெற்றோல்

கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும், எழுத்துக்களினதும் நிரையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

33L 44JAA 6SJ 56LRT 9SSi 67LAS 8RJL

21. இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள இந் நிரையில் எத்தனை L எழுத்துக்கள் உண்டு. ..............................

22. சம எழுத்துக்கள் உள்ள எழுத்து எவை? ................

23. நிரையில் உள்ள எண்களின் கூட்டுத்தொகை யாது? ..............................

24. நிரையில் எழுத்துக்களா, எண்களா கூடவுள்ளது? ..............................

25. அடுத்துவரும் இரு எண்களின் கூட்டுத்தொகை 75 அந்த இரு எண்களும் எவை? ..............................

26. குறைந்தசோடி எழுத்து யாது? ..............................

27. நிரையில் உள்ள ஆங்கில எழுத்துக்களை வரிசை ஒழுங்கில் எழுதுக? ..............................

28. அடுத்து வரும் இரு எண்களை பெருக்கும் போது வரும் விடை 264 ஆகும். அந்த எண்கள் எவை? ..............................

சரியான விடையின் கீழ் கோடிடுக.


29. சிறு பிள்ளைகள் முத்தோர் சொல் கேட்க வேண்டும் இதற்குக் காரணம்?
1. சிறு பிள்ளைகள் நல்லவை, தீயவை யாவை என்று அறிந்திராமை.
2. முத்தோர் சிறுபிள்ளைகளிலும் வயது கூடியவர்கள்.


30. இலங்கையில் பல பிரதேசங்களில் ஆறுகளும் அருவிகளும் வற்றிக்கொண்டு போகின்றன. அதற்குக் காரணம்?
1. மக்கள் விவசாயத்துக்கு அதிக அளவு நீரைப் பயன் படுத்துகின்றமை.
2. மக்கள் தொடர்ந்தும் மரங்களை வெட்டி வீழ்த்தி வருகின்றமை.


31. நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாட்டு எனும் கருத்துடைய பழமொழி யாது?
1. துள்ளுகிற மாடு பொதிசுமக்கும் என்பது.
2. வேலைக்கள்ளிக்குப் பிள்ளைப் பராக்கு என்பது.


32. குழந்தை தனக்கு ஏதாவது தேவைப்படும் போது அழுகிறது. குழந்தையின் இச்செயல் எதற்கு ஒப்பாகும்.
1. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
2. முயற்சி திருவினையாக்கும்.

கீழ்காணும் படங்களில் வித்தியாசமான உருவைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

33. 
A B C D ..............

34. 
A B C D ..............

35. 
A B C D ..........


36. 
A B C D ..........

கீழ் காணும் தமிழ் எழுத்துக்கள் குறிப்பிட்ட சில இலக்கங்களைக் குறிப்பிடுகின்றன.

| | | |
|---|---|---|
| க ........ 1 | ச ........ 4 | ய ...... 7 |
| வ ........ 2 | த ...... 5 | ஞ ...... 8 |
| க ........ 3 | ந ...... 6 | ர ...... 9 |

37. கீழே காணப்படும் பொருட்களின் விலை யாது?
ரூபா..............................





38. 

ரூபா ..............................

ஒவ்வொரு படவரிசையிலும் வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து அதற்குரிய எண்ணை கோட்டின் மேல் எழுதுக?

39. 
1 2 3 4 ......

40. 
1 2 3 ......

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பத்தாம் திகதிப் பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

> மகிந்தன் வைத்தியசாலையும்,
> மருத்தெண்ணெய்க் களஞ்சியமும்.

பிரதமவைத்திய நிலையம் : 30 A மகிந்தன் வீதி,
கொட்டகேனா.
காலை 8.30 முதல், காலை 12.00 வரை நாட்களில் உட்பட அனைத்து நாட்களிலும் திறந்திருக்கும்.
கிளை வைத்திய நிலையம் : 219 காலி வீதி,
வெள்ளவத்தை
தொலைபேசி இல : 2652335
பி.ப 4.30 முதல் - இரவு 8.30 வரை.



ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாட்களில் திறந்திருக்கும் குழந்தைகளுக்கான எண்ணெய், கோரோசனை, மாத்திரை, பெரியோருக்கான வாதநோய்களுக்கான மருந்து வகைகள் உட்பட அனைத்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

வைத்திய கலாநிதி மகிந்தன்.

மேலே தரப்பட்ட தகவல்களை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. பிரதம வைத்திய நிலையத்தின் முகவரியை எழுதுக. ..............................

2. பிரதம வைத்திய நிலையம் ஒருநாளில் எத்தனை மணித்தியாலம் திறந்திருக்கும்? ..............................

3. கிளை வைத்திய நிலையம் எங்கு அமைந்துள்ளது? ..............................

4. கிளை வைத்திய நிலையம் எந்த நாளில் திறக்கப் படமாட்டாது? ..............................

5. கிளை வைத்திய நிலையம் வாரம் ஒன்றில் எத்தனை மணித்தியாலம் திறந்திருக்கும்? ..............................

6. இந்த வைத்திய நிலையத்தில் எப்படியான மருந்து வகைகள் உண்டு? ..............................

7. இதில் உள்ள தொலைபேசி இலக்கத்தில் உள்ள ஆறின் இடப்பெறுமானம் யாது? ..............................

8. வைத்திய நிலையத்தை நடத்துபவர் யார்? ..............................

பின்வரும் தமிழ் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

9. காலை ..............................

10. ஞாயிறு ..............................

11. பெரியோர் எந்த வகையான நோய்க்கு இங்கு மருந்து பெற்றுக் கொள்ள முடியும்? ..............................

12. களஞ்சியம் என்னும் சொல்லுக்குரிய ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று தருக? ..............................

ஒரு வாரத்தில் SVM விற்பனை நிலையம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட உணவுப் பொருள் பற்றிய விபரம் பின்வருமாறு.

| பொருள் | விலை ரூபா. சதம் |
|---|---|
| அரிசி 1kg | 38.00 |
| சீனி 2kg | 60.00 |
| பருப்பு 1/2 kg | 30.00 |
| கோதுமை மா 1kg | 29.00 |
| தேயிலை 1/4kg | 30.00 |
| பால்மா 1 பை | 150.00 |

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

13. 1 kg சீனியின் விலை யாது? ..............................

14. 1 kg பருப்பும், 1 kg அரிசியும் வாங்கினால் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்? ..............................

15. 2 kg கோதுமை மாவின் விலை யாது? ..............................

16. 2kg பால்மா பக்கற்றின் வலை யாது? ..............................

17. விலைப்பட்டியலின்படி கடைக்காரனுக்கு கொடுத்த முழுப்பணமும் யாது? ..............................

18. 1kg அரிசி ரூபா 38.00 படி, 10kg அரிசியின் விலையாது? ..............................

19. 1kg தேயிலையின் விலை யாது? ..............................

20. 1/2 kg தேயிலையின் விலை யாது? ..............................

21. சிட்டையில் உள்ள பொருட்களின் நிறை kg மில் தருக? ..............................

22. கோதுமைமாவின் விலையை உரோம எண்ணில் தருக? ..............................

பின்வருவனவற்றில் சரியான விடையின் கீழ் கோடிடுக.

23. வானவில்லில் இல்லாத நிறம்?
i) பச்சை ii) கறுப்பு iii) சிவப்பு iv) கருநீலம்

24. உயிர்ச்சத்து C உள்ள உணவுப் பொருள் யாது?
i) எலுமிச்சம்பழம் ii) அரிசி
iii)இலை iv) வெண்ணெய்

25. நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த சிறிய நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
i) குடாநாடு ii) நாடு iii) தீவு iv) கண்டம்

26. தாய் தந்தையரை இழந்தவன்.
i) அகதி ii) ஊதாரி iii) அநாதை iv) ஏழை

27. பௌத்தர்களின் வேத நூல்.
i) திருக்குர்ஆன் ii) பைபிள்
iii) திருக்குறள் iv) திரிபிடகம்.

பின்வரும் வினாக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் x எனவும் எழுதுக.

28. ......... கிடைக்கோடு இரேகை எனப்படும். ( )

29. வண்ணத்துப்பூச்சிக்கு உருமாற்றம் உண்டு. ( )

30. தாழை மரத்துக்கு உதைப்பு வேர் உண்டு. ( )

31. நட்சத்திரத்துக்கு சுய ஒளி இல்லை. ( )

32. நத்தையின் முட்டை நிறம் வெள்ளை ஆகும். ( )

33. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் தலவாக்கொல்லையில் உண்டு. ( )

இங்கே மடிக்கவும்

# வர்த்தக நிலையங்களை மூடி பேரணியில் இணையுங்கள்!

## வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு

யாழ்.குடாநாட்டில் இன்று நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டி தமது வர்த்தக ஊழியர்கள் சகிதம் பேரணியில் பங்குபற்றுமாறு, யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் மக்கள் கடந்த இருபது ஆண்டுகளாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டபின் – புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்களாக யுத்தநிறுத்தம் ஏற்பட்டபோதும், அதனால் இயல்பு நிலையான வாழ்க்கை எமது மக்களுக்கு ஏற்படுமென எதிர்பார்த்து இருந்தும் எமது மண்ணில் வாழும் மக்களுக்கு இயல்பான சகஜநிலை வாழ்க்கை ஏற்படவில்லை.

இதனை வலியுறுத்தி ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இன்று நடைபெறும் பேரணியில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல வர்த்தக சங்கங்களையும் சேர்ந்த வர்த்தகப் பெருமக்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களைப் பூட்டி, தமது வர்த்தக ஊழியர் சகிதம் இந்தப் பேரணியில் பங்குபற்றி எமது மக்களின் சுபீட்சத்துக்காக பாடுபடவேண்டுமென, யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

# கடற்கரையில் அணைகள் அமைக்க எந்தவித நடவடிக்கையும் இல்லை!

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு – கிழக்கு பிரதேச கடற்கரை கடல் அணைகளைக் கட்டுவதாக கூட்டங்களில் மட்டும் கூறிவிட்டு அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காதது குறித்து மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சித்திரைமாதக் கடற்கொந்தளிப்புக்கு முன்பாக மண் அணைகளையாவது நிறுவவேண்டும் என தெரிவித்திருந்தபோதும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. முன்பிருந்த முருகைக்கல் வேலிகள்கூட மீள அமைக்கப்படவில்லை.

கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் தான் வீடுகளை அமைக்கவேண்டும் என அரசு தெரிவித்திருந்தது. அதற்கமைவாக இராணுவம் வடமராட்சியில் அள வீடுகளில் ஈடுபட்டிருந்தபோது, மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது வீடுகளை அந்த இடங்களிலே புனரமைத்துவருகின்றனர்.

எனவே மீண்டும் கடற்கொந்தளிப்பு இடம்பெற்றால் தடுக்கும் முகமாக அணைகளை உடனடியாக அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (14)

# புலோலி பல்லப்பைக் கிராமத்தை மீட்டுத்தருமாறு மக்கள் கோரிக்கை

புலோலி பல்லப்பைக் கிராமத்தைப் படைத்தரப்பிடமிருந்து மீட்டுத்தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டை படையினர் கைப்பற்றிய காலப்பகுதியில், இந்தப் பிரதேசத்தில் நிலைகொண்ட இராணுவம் படிப்படியாக அருகிலுள்ள வீடுகளையும் உள்ளடக்கி பருத்தித்துறை – மருதங்கேணி பிரதான வீதியின் ஒருபகுதியை மக்கள் பாவனைக்கு தடைசெய்து, உயர் பாதுகாப்பு வலயமாக்கியது.

கடந்த பலவருடங்களாக இந்த இராணுவ முகாமுக்கு அருகில் வசித்துவரும் மக்கள் இராணுவத்தால் பெரும் நெருக்கடிக்குள்ளாகினர். அந்தக் கிராமத்தைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் வசித்துவருகின்றனர்.

தொடர்ந்தும் அவ்வாறு இருக்க முடியாத நிலையில் – பலரிடமும் கோரிக்கைகள் விடுத்தும், மகஜர்கள் கையளித்தும் எந்தப் பயனும் இல்லையென அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (14)

# கற்கடதீவு ஆலயத்துக்கு புதிய நிர்வாககுழு தெரிவு

கற்கடதீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்கான புதிய நிர்வாகக் குழுவொன்று கடந்த சனிக்கிழமை இரவு கற்கடதீவு ஆலயச் சூழலில்வைத்து தெரிவுசெய்யப்பட்டது.

நெடுந்தீவு அந்தோனியார் பத்திமா ஆலயப் பங்கைச் சேர்ந்த ஆறுபேர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். இவர்களே இனிவரும் காலங்களில் திருநாள் ஒழுங்குகளை மேற்கொள்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை கற்கடதீவு பகுதியில் தொடர்ந்து தங்கிநின்று தொழில்செய்யும் மன்னார் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் ஆலயப் பராமரிப்புக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தினுள் வைத்து வானொலி கேட்டல், மீன்பிடி உபகரணங்களைச் சீர்செய்தல் போன்ற வேலைகளை இனிவரும் காலங்களில் – அங்கு தங்கி தொழில் செய்வோர் மேற்கொள்ளவேண்டாம் என நெடுந்தீவு பங்குத் தந்தை திருநாள் நிறைவின்போது கேட் டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (113)

## வலயமட்டப் போட்டிகள்

(சுதுமலை)

தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட கரப்பந்தாட்ட, துடுப்பாட்டப் போட்டிகள் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

துடுப்பாட்டப் போட்டிகள் நாளையும், கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது. (91)

# தொலைத்தொடர்புநிலையத்தின் விளம்பரப்பலகை சேதமாக்கப்பட்டது

தனியார் தொலைத் தொடர்பு நிறுவன விளம்பரப் பலகையொன்று இனந்தெரியாத ஒருவரால் சேதமாக்கப்பட்டது. இணுவில் – மருதனார்மடம் பகுதியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையமொன்றின் பெயர்ப் பலகையே இவ்வாறு சேதமாக்கப்பட்டது.

தொலைத்தொடர்பின் அளவைக் குறிக்கும் வகையில் வரையப்பட்டிருந்த பகுதி மீது வெள்ளை நிற வர்ணம்பூசி அழிக்கப்பட்டதுடன், இணுவில்தொலைத்தொடர்புசீராக இல்லை என ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் கையடக்கத் தொலைபேசியைப் பாவிக்கும் பாவனையாளர்களில் ஒருவர் சேவை சீரின்மையால் அடைந்த இடையூறாலேயே இவ்வாறு செய்ததாகக் கூறப்படுகிறது. (94)

## குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தால் சத்துணவு மா வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குடும்ப புனர்வாழ்வு நிறுவன யாழ்.மாவட்ட கிளை – சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ். மாவட்டத் தில் 1000 பொதி சத்துணவு மா பைக்கற்றுக்களை வழங்கவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் முதற்கட்டமாக இந்தச் சத்துணவு மா பைக்கற்றுகள் வழங்கப்படவுள்ளன.

இவை அனைத்தும் தற்போது வவுனியா குடும்ப புனர்வாழ்வு நிறுவன கிளைக்கு கிடைத்துள்ளது.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் 200 பேருக்கு – தலா 700 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தகவல் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழுக்கான ஒருவருட முழுநேரப் பயிற்சி நெறிக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியுடன் தமிழ் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதுக்கு குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை ஆகியன அடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நாளை தொல்புரம் மேற்கு பாணாவெட்டி வீதியிலுள்ள கணினிப் பயிற்சி நிலையத்துக்கு நேரில் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.


# கைத்தொழில் முயற்சியாளரை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை!

## மாகாண பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு நாடெங்கிலுமுள்ள கைத்தொழில்முயற்சியாளர்களைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதியிலுள்ள கைத்தொழிலாளர்கள் அனைவரும் தத்தமது பிரிவுக்குரிய பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தம்மை பதிவுசெய்யுமாறு – வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை பிரதிப் பணிப்பாளர் தெ.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

# ஒஸ்மானியா கல்லூரியில் நேற்று இல்ல மெய்வல்லுநர் போட்டி!



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்றைய தினம் கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது .

கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ் சுபியான் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராஜா மற்றும் சட்டத்தரணி ஜனாப் எம்.எம்.றமீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கல்லூரியின் இல்லங்களான ஷாபி இல்லம் மற்றும் இக்பால் இல்லம் ஆகிய இரு இல்லங்களுக்கும் இடையில் போட்டிகள் நடைபெற்றன. கிறா அத் ஓதலை தொடர்ந்து கொடியேற்றம், அணிநடை, ஒலிம்பிக் தீபம் ஏற்றல், சத்தியப் பிரமாணம் ஆகிய நிகழ்வுகளை தொடர்ந்து ஓட்டப்போட்டிகள், பலூன் உடைத்தல், சாக்கோட்டம் போன்ற போட்டிகள் இடம்பெற்றன.

இடைவேளையை தொடர்ந்து பழைய மாணவர் நிகழ்ச்சி, உத்தியோகத்தர் – ஆசிரியர்கள் நிகழ்ச்சி, தலைவர் உரை, சிறப்பு விருந்தினர் உரை, முதன்மை விருந்தினர் உரை பரிசில் வழங்கல், நன்றியுரை, கல்லூரி கீதம் என்பனவற்றுடன் போட்டி முடிவுற்றது.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி வளங்கள் குறைந்த நிலையில் இரண்டாவது தடவையாக இல்ல விளையாட்டுப் போட்டியை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## கட்டாக்காலி நாய்களை அழிக்குமாறு பணிப்பு

உள்ளூராட்சி மன்றங்கள் தமது எல்லைப் பரப்புக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு – உள்ளூராட்சி ஆணையாளர் சகல பிரதேச, நகர சபைகளையும் கோரியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கட்டாக்காலியாகத்திரியும் நாய்களால் அசௌகரியங்கள் ஏற்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (29)

## தென்மராட்சி வலய அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவிருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (29)

## வீதி செப்பனிடப்பட்டது

யாழ்.நகரின் வின்சர் சந்தி – ஸ்ரான்லி வீதி சந்திப் பகுதியில் நீண்ட நாட்களாக குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வீதிப்பகுதி நிரப்பப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

நகரின் முக்கிய சந்தியான இந்தப் பகுதி பல நாட்களாக யாரும் கவனிப்பாரற்ற நிலையில் குன்றும் குழியுமாக காணப்பட்டது. இதனால் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் செல்ல சிரமப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கஸ்தூரியார் வீதியில் ஏனைய இடங்களில் காணப்பட்ட சேதமடைந்த வீதிகளும் திருத்தப்பட்டுள்ளன.

## அஸ்வமேத மகாயாகம்

சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அஸ்வமேத மகா யாகம் எதிர்வரும் 6 ஆம் திகதிமுதல் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காக இந்த யாகம் நடத்தப்படவுள்ளது. அத்துடன் இந்த மாவட்டத்தில் இப்படியான ஒரு யாகம் முதன்முறையாக இங்குதான் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் மாலை 6.30 மணிக்கு 'உலகம் ஒரு நாடகமேடை' என்னும் பொருளில் இளைப்பாறிய ஆசிரியை அன்னபூரணி சிவசக்திவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## வரணியிலும் சட்டவிரோத மண்அகழ்வு அதிகரிப்பு

வரணிப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரித்திருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் இந்தப் பகுதிக்கு வரும் லொறி மற்றும் உழவு இயந்திரங்களில் சட்டவிரோதமாக அகழப்பட்டு மணல் ஏற்றிச் செல்லப்படுகிறது. இதனால் இந்தப் பகுதியில் மழை காலங்களில் குடியிருப்புகளுக்கு வெள்ளம் செல்லும் அபாயம் ஏற்பட்டு இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (29)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐம்பது தற்காலிக குடியிருப்புக்கள்!

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நலன்புரி நிலையங்களில் பராமரிக்கப்பட்டுவரும் மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுனாமி அனர்த்தத்துக்குப்பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு – கரைச்சிக்குடியிருப்பு என்னும் இடத்தில், தண்ணீரூற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை நலன்புரி நிலையத்தில் பராமரிக்கப்பட்டுவந்த 50 குடும்பங்களுக்குமான, 50 தற்காலிக வீடுகளைக்கொண்ட குடியிருப்பு ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சுனாமி அனர்த்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் விசேட பணிப்பாளர் றெஜி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு சுனாமி அனர்த்த வேலைத்திட்ட இணைப்பாளர் பாலா, முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிப்பளர் ராமமூர்த்தி, கடற்புலிகளின் முல்லைத்தீவு நகர தளபதி தினேஸ், சுனாமி கடற் கொந்தளிப்பு அவசரகால செயலணிக்குழு இணைப்பாளர் ஈழமாறன், சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப்பணிப்பாளர்களின் ஒருவரான வின்சன், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழக சிறுவர் நலத்திட்டப்பணிப்பாளர் ரவி மற்றும் அந்தப் பகுதி கிராமசேவையாளர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து சிறப்புரைகளும், 50 குடும்பங்களுக்குமான தற்காலிக வீடுகள் முறைப்படி கையளிக்கப்பட்டு, மக்களின் தேவைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் -02

1836 : வொஷிங்ரனில் நடந்த மாநாட்டில் அமெரிக்க விடுதலைப் பிரகடனம் அங்கிகரிக்கப்பட்டது.

1943 : சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி அலெக் சாண்டர் எமில் ஜான் யெர்ஸின் மரணமானார். இவரே பிளேக் நோயை உண்டாக்கும் பக்ரீரியாவைக் கண்டு பிடித்ததோடு, அதற்கு எதிர் மருந்தையும் முதல் முதல் தயாரித்தவர்.

1949 : ரஷ்யாவுக்கு எதிராகப் போர் தொடுக்க முனையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்க ஜனநாயக சக்திகளே அணி திரள் வீர் என அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியத் தலைவர் வில்லியம் இஸட் பாஸ்ட்டர் வேண்டுகோள் விடுத்தார்.

1960 : மொராக்கோவின் அகாதிர் என்ற நகரில் பெரு நில நடுக்கம் ஏற்பட்டது. நகரில் 60 சதவீதமான கட்டடங்கள் தரைமட்டமாகின. 10000 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர்.

1978 : ரஷ்யாவால் சோயுஸ் – 28 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. இதில் பயணித்த அலெக்ஸி குபரேல் மற்றும் செக்கோஸ் லோவாக்கிய வீரர் விளாடி மிர் ரெமெக் இருவரும் எட்டு நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்தனர்.

தொகுப்பு - சந்துரு

## தற்காலிக முன்பள்ளி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தற்காலிக முன்பள்ளி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு – உண்ணாப் புலவுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் அமைக்கப்பட்ட இந்த தற்காலிக முன்பள்ளி திறப்பு விழாவில், முன்பள்ளிச் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை, அன்றைய தினம் பூநகரியிலுள்ள மாவீரர் லெப்டினன் சுமன் முன்பள்ளி, லெப்டினன் காந்தன் முன்பள்ளி ஆகிய இரு முன் பள்ளிகளுக்கு பூநகரி அரசியற்துறையால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## பழுதடைந்த நிலையில் நிழற்பட இயந்திரம்

கிளிநொச்சி மாவட்ட பதிவாளர் செலகத்துக்கென யுனிசெப் நிறுவனத்தால் வழக்கப்பட்ட நிழற்பட இயற்திரம் கடந்த 3 மாத காலத்துக்கு முன்னர் பழுதடைந்த நிலையில் இதுவரை திருத்தப்படாதுள்ளது. இதனால் பதிவுகள் மேற்கொள்ளப்பட முடியாத நிலை காணப்படுகிறது.

இதேவேளை முக்கியமான, அவசரமான பதிவுகளை தாம் கையால் எழுதியே மேற்கொள்வதாகவும், இதனால் குறிப்பிட்ட சில பதிவுகளைத் தவிர, ஏனைய பதிவுகள் தேக்கமடைந்து காணப்படுவதாகவும், பதிவு அலுவலக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு, பழுதடைந்த நிழற்பட இயந்திரத்தை திருத்திக் கொடுப்பதுடன், இன்னுமோர் நிழற்பட இயந்திரத்தைப் பெற்றுத் தருவதன் மூலமே தாம் எமது பணியைச் சரிவர நிறைவேற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வவுனியா மாவட்டத்தில்

# பெண்களைக் கேலி செய்யும் இளைஞர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க நீதிவான் உத்தரவு!

வவுனியா பிரதேசத்தில் குறிப்பிட்ட முக்கிய சந்திகளில் கூடிநின்று பெண்கள், பாடசாலை மாணவிகளைக் கேலி செய்வதிலும், வீணான தொல்லை கொடுக்கும் செயல்களிலும் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்கு எதிராக – தண்டனை சட்டக் கோவைக்கு அமைய, வீதிகளில் அலைந்து திரிபவர்களுக்கு எதிரான சட்டவிதி மற்றும் பெண்களைக் கேலி செய்து தொல்லை கொடுப்போருக்கு எதிரான சட்டவிதிகளின் கீழ், சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா தலைமையக பொலிஸ் அதிகாரிக்கு, வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வீதிகளில் காரணமின்றி வெறுமனே கூடிநின்று இயல்பு நிலைமைக்கும், அமைதிக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் குறிப்பிட்ட சந்திகளில் இளைஞர்கள் செயற்படுவது தொடர்பாக நீதிமன்றத்துக்கு பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, வவுனியா மாவட்ட நீதிபதி பொலிஸாருக்கு வழங்கியுள்ள உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அண்மையில் வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் இரு இளைஞர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலின் போது – கத்திகள், பொல்லுகள் பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்தப்பட்டதால், இளைஞர்கள் காயங்களுக்குள்ளானதையடுத்து நகர்புற பாடசாலை மாணவர்கள் ஆறு பேர் உட்பட, எட்டுப்பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டனர்.

இவர்களில் ஆறு பேர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பதையும் அவர்களின் பல்கலைக்கழகக் கல்வியில் பாதிப்பு ஏற்படக் கூடாது என் பதையும் கருத்தில் கொண்டு அவர் களுக்கு பிணை வழங்கப்பட்டதாகவும் நீதிபதி சுட் டிக்காட்டியுள்ளார்.

இதைத் தொடர்ந்து பண்டாரிகுளம் பாடசாலைமாணவர் குழுவுக்கும், இளைஞர் குழுவுக்கும் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் பாரதூரமான காயங்களுக்கு இளைஞர்கள் இலக்காகியுள்ளதாகவும், காயமடைந்தவர்கள் ஆபத்தான நிலையில் அநுராதபுரம், கொழும்பு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நீதிபதி, நான்கு பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குழுக்களுக்கு இடையிலான வீதிச் சண்டைகள் தொடர்ந்து செல்வதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாகவும் தெரிவித்தார்.

இந்தவகையான வீதிச்சண்டைகளையும், குழு மோதல்களையும் தொடர்ந்து அனுமதிக்க முடியாது என்பதால் சந்தேக நபர்களுக்குப் பிணை மறுக்கப்பட்டு, எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

இரண்டாவது சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலைமையில் இளைஞர்களும், பாடசாலை மாணவர்களும் தெருக்களில் கூடிநின்று, குழுக்களாகச் செயற்பட்டு வருவதுடன், தங்களுக்குள் மோதிக்கொள்வதையும், அநாவசியமான செயல்களில் ஈடுபட்டு அமைதிக்கும், இயல்பு நிலைமைக்கும் பங்கம் விளைவிப்பதால் சந்தேகத்துக்கு இடமானவர்களைக் கைதுசெய்து விசாரணை செய்வதுடன், நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் எனவும் அவர் பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார்குளம், பண்டாரிகுளம், குருமண்காடு, பூந்தோட்டம் ஆகிய இடங்களில் உள்ள முக்கிய சந்திகள், முக்கிய பாடசாலைகள், பெண்கள் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் எதிரில் காலையில் மாணவிகள், ஆசிரியைகள் பாடசாலைகளுக்குச் செல்லும் வேளையிலும், பிற்பகலில் பாடசாலை முடிவடையும் வேளைகளிலும், மாலையிலும், விடுமுறை நாட்களில் தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பமாகும் நேரத்திலும், முடிவடையும் நேரத்திலும் இளைஞர்கள் இவ்வாறு குழுக்களாகக் கூடிநின்று செயற்படுவதாகவும், பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.




## நிரந்தர கட்டட வசதிகள் இன்றி முல்லைத்தீவு பதிவாளர் அலுவலகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பதிவாளர் அலுவலகம் நிரந்தரக் கட்டட வசதியின்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகம் முல் லைத்தீவு கச்சேரி அலுவலகத்தில் வைத்துப் பதிவுகளை மேற்கொண்டு வருகிறது.

இதனால், சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களது இறப்புப் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலையில், சிரமப்பட வேண்டியுள்ளது என, முல்லைத்தீவுக்கு வருகைதந்த வடக்குக் – கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் சதாசிவம் ஐயர் தெரிவித்தார்.

# அடிப்படை வசதியற்ற நிலையில் இயங்கிவரும் முன்பள்ளிகள்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு முன்பள்ளிகள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்குகின்றன.

கரும் புள்ளியான் இருதயநாதர் முன்பள்ளியில் 30 வரையான சிறார்கள் கல்வி கற்றுவரும் நிலையில், கடந்த ஆண்டு ஏற்பட்ட கடற் கொந்தளிப்பால் சேதமடைந்த இந்த முன்பள்ளிக் கட்டடம் இதுவரையில் புனரமைக் கப்படாதுள்ளது.

இதேவேளை தெங்கு, பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கீழ் இயங்கும் செல்வபுரம் கலைமகள் முன்பள்ளி மற்றும் இத்தியடி முன்பள்ளி, சிராட்டிக்குளம் பனங்காமம், மூன்று முறிப்பு ஆகிய பின்தங்கிய பிரதேச முன்பள்ளிகள் கட்டடவசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி ஆகிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில், பெரும் சிரமங்களின் மத்தியில் மிக நீண்ட காலமாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வவுனியாவில் கொடிவாரம்

சுனாமி கடற் கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக வவுனியா மாவட்ட அனர்த்த துயர் துடைப்புக்குழுவால் நேற்று முன்தினம் தொடக்கம், 6 ஆம் திகதி வரை அனர்த்த துயர்துடைப்பு கொடி வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கொடிவார ஆரம்பநிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அனர்த்த துயர்துடைப்பு குழுவின் தலைவரும், கிராமசேவையாளருமான வி.எஸ்.முத்துராசா, முதலாவது கொடியை மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் கே.வி.தங்கராசாவுக்கு வழங்கி கொடிவாரத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட துணைஅரசியற்துறைப் பொறுப்பாளர் நி.தர்மேந்திரா, வர்த்தக சங்கத் தலைவர் பி.எஸ்.அப்துல்லா, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வன்னி மாவட்ட தலைவர் கே.ஏ.செந்தில் நாதன், நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுத் தலைவர் சு.ஞானப்பிரகாசம், வன்னிநாடாளுமன்ற உறுப்பினர், கனகரட்ணத்தின் செலயலாளர் எஸ். சபாநாதன் மற்றும் அனர்த்த குழுவின் முக்கிய பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு, கொடிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தக் கொடி விற்பனை மூலம் சேகரிக்கப்படும் பணம் பாதிக்கப்பட்ட மக்களுடைய பயன்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளது எனவும். இந்தக் கொடி விற்பனை பாடசாலை மட்டத்திலும், பொது மக்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.*

திருக்குறள்

## நமது நோக்கு

# நிஜ யுத்தத்துக்கு வழிகோலும் நிழல் யுத்த நடவடிக்கைகள்...

யார் என்ன சொன்னாலும், எத்தகைய அயராத கடும் முயற்சியை மேற்கொண்டாலும் அந்தக் கடும் முயற்சியின் காரணமாக எத்தகைய நம்பிக்கையை - உறுதிப்பாட்டை எவர் தெரிவித்தாலும் - இலங்கையில் சமாதானம், நிரந்தர அமைதி ஏற்படுவதற்கான சகல வழிகளையும் ஒவ்வொன்றாக அடைத்துக்கொண்டுவரும் இலங்கை அரசானது, மக்களின் சகல எதிர்பார்ப்புக்களையும் திட்டமிட்டு சிதைக்கும் நடவடிக்கைகளையே தொடர்ந்தும் தீவிரமாக மேற்கொண்டுவருகிறது என்பதை உறுதிப்படுத்தும் சம்பவங்களே அடுக்கடுக்காக நிகழ்ந்து வருகின்றன.

கடந்த மாதம் 7 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மட்டு.- அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு விடுதலைப் புலிப்போராளிகளும், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் வெலிக்கந்தவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்டம் தம்பட்டைஎன்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீது இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களில் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இதைத்தான் சொறிச்சேட்டை என்று தமிழ் மக்கள் கூறுவார்கள். இந்தச் சொறிச்சேட்டைக்குக் காரணமானவர்கள் வழமைபோல் எங்கு பதுங்கவேண்டுமோ அங்கு சென்று பதுங்கிக் கொள்வார்கள். ஆனால், அவர்களை ஏவிவிட்டவர்கள் தமக்கு எதுவுமே தெரியாது என்ற பாவனையில் கையை விரித்து அப்பாவித்தனம் காட்டமுனைவார்கள். இதுவும் அனைவரும் அறிந்த விடயமேயாகும்.

நிராயுதபாணிகளான இந்தப் பெண் அரசியற்துறை நடவடிக்கையாளர்கள் மீதான தாக்குதலை - துப்பாக்கிப் பிரயோகத்தை செய்தவர்கள் யார் என்ற கேள்விக்கான பதிலை எவரும் எவருக்கும் சொல்லவேண்டியதில்லை. இத்தகைய கோழைத்தனமான நடவடிக்கைகளைச் செய்யக்கூடியவர்கள் கொத்தடிமைச் சேவகம் புரியும் கைக்கூலி அமைப்புகளில் ஒன்றைச் சார்ந்தவர்களாகவே இருப்பர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கடந்த இருதசாப்தத்திற்கும் அதிக காலமாக இத்தகைய கருங்காலிக்குழுக்கள் அரசபடையினருடன் இணைந்து முதுகெலும்பற்றவர்களாகச் செயற்பட்டதில் ஒட்டுமொத்த தமிழினத்துக்கும், தமிழர் தாயகத்துக்கும் ஏற்படுத்திய அழிவுகள் கொஞ்சநஞ்சமல்ல. உதைத்த காலைநக்கும் உணர்வற்ற இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எந்தவிதமான சுயத்தன்மையும் அற்றவர்களாகவும், தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுவரும் வரலாற்றுத் துயரங்களுக்கு காரணிகளாகவும் தொடர்ந்து இயங்கிவருவதுதான் தமிழினம் வெட்கமும், வேதனையும் அடையவேண்டிய விடயமாகும்.

அண்மையில் இலங்கை வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பொன்றின்போது ஜனாதிபதி கூறிய வார்த்தைகள், படையினருடன் இணைந்து எந்த ஆயுதக்குழுக்களும் செயற்படவில்லை என்று அழுத்தம் திருத்தமாக மறுப்பினைத் தெரிவித்திருந்தது.

அந்த வார்த்தைகள் காற்றோடு கலந்துமறைந்துபோகு முன்னரே இந்தத் தாக்குதல் நடந்தேறியுள்ளது. நிச்சயமாக இந்தத் தாக்குதல் குறித்தும் வருத்தம் தெரிவிக்கப்போகும் அரசு, தங்கள் படையினருக்கும் இந்தத் தாக்குதலுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என அறிக்கைவிட்டு, அடுத்த தாக்குதலை மேற்கொள்வதற்கான சமிக்ஞையை வழங்கவும்கூடும்.

அக்கரைப்பற்றிலிருந்து ஆறு கிலோமீற்றர் தொலைவிலுள்ள தம்பட்டை என்ற பகுதியில் நடைபெற்ற இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் - இராணுவத்துக்குத் தெரியாமலோ, அல்லது அவர்களின் பாதுகாப்பு பின்பலம் இன்றியோ, இதனை மேற்கொண்டிருக்கவேமுடியாது. இவ்வீதிவழி செல்லும் சகல வாகனங்களையும் சோதனையிடும் படையினரை அறியாமல் ஆயுதபாணிகள் அந்தப்பகுதியில் நடமாடியிருக்கவேமுடியாது.

இந்தச் சம்பவம் வாவிக்கும் கடலுக்கும் இடைப்பட்ட, அதிரடிப் படையினரின் வலயத்தில் நடந்திருப்பதால், சம்பவத்துக்கு யாருடைய ஆதரவுப் பின்பலம் இருந்திருக்கும் என்பது தெளிவாகும்.

கொலைமுயற்சியில் ஈடுபட்ட தமிழர்விரோத, சமாதான விரோத சக்திகள் தப்பிய விதத்தைப் பார்க்கையில், அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கிய சக்தி எதுவாக இருக்கும் என்பதும் சந்தேகமற்ற விடயமாகும். கிழக்கில் அமைதியின்மையை ஏற்படுத்தி, பதற்றத்தை அதிகரித்து அரசியல் குழப்பத்தை உண்டுபண்ணி, விடுதலைப் புலிகளை சினமேற்றி, போருக்கழைக்கும் நிழல் யுத்தத்தை தொடர்ந்து தீவிரமாக்க முனையும் அரசும், அரசபடையும் நிஜயுத்தத்தை வலிந்து ஏற்படுத்தி சமாதான சூழலுக்கு சமாதி கட்ட முனைகிறது என்பதில் ஐயமில்லை.


ஆயுதக்குழுக்களைப் பயன்படுத்தும் படைத்தரப்பினர் அவர்களைப் பலிக்கடாக்களாக்கி தமது அபிலாஷைகளை எட்டமுனைகிறார்கள் என்பதையே கிழக்கின் சம்பவங்கள் நிரூபித்து வருகின்றன.

சிலரைப் பலகாலமும் பலரைச் சிலகாலமும் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்றமுடியாது என்பதை அரசும், படைத்தரப்பும் அவர்களின் கைக்கூலிகளாக இயங்கும் குழுக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

நிழல் யுத்தத்தின் மூலம் தமிழர்களையும், தமிழர் தலைமையையும் அச்சுறுத்தி ஒடுக்கலாம் என்றோ, சினமேற்றி போர்க்கோலம் கொள்ளச் செய்து சமாதானச் சூழலைக் குழப்பிய பழியை அவர்கள்மீது போடலாம் என்றோ அரசு நினைக்குமானால், அது ஆபத்தான சூழலுக்குள் நாட்டைத்தள்ள முனைகிறது என்றே அர்த்தமாகும்.

கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழியை இந்தக் கட்டத்தில் அரச தரப்பினருக்கு நினைவூட்டுவதும் அவசியமாகின்றது.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# மீண்டும் இந்தியா - இலங்கை விவகாரத்தில் மாட்டிக்கொள்ளுமா?

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கான சரியான நேரம் வந்துவிட்டது என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடெல்கியில் கூறியிருந்தார். டெல்கியில் முக்கிய பிரஜைகள் கலந்துகொண்ட ஒரு நிகழ்வில் - கதிர்காமர் இப்படிச் சொல்லியிருக்கிறார். இதற்கு முன் இந்தியப் பிரதமர், இந்திய வெளிவிவகார அமைச்சர், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து - சுனாமிப் பேரழிவைத் தொடர்ந்து இந்தியா உடன் உதவியதற்கு இலங்கையின் நன்றியைத் தெரிவித்திருந்தாராம். இதன்பின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த கதிர்காமர், இலங்கையின் சமாதான முயற்சிகள் பற்றிப் பேசுவதற்கு இது உரிய நேரமல்லவென்றும், சுனாமி பேரழிவு - அதிலிருந்து மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதுதான் இன்றுள்ள முக்கிய பிரச்சினையென்றும் சொல்லியிருந்தார். ஆனாலும் இந்தியாவும், இலங்கையும் விரைவில் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமெனவும் கூறியிருந்தார். இப்பொழுது இலங்கை விவகாரத்தில் இந்தியா - தலையிடுவதற்கான சரியான தருணம் வந்துவிட்டதென்று கூறியிருக்கிறார்.

எதைச் சரியான தருணம் என்று கதிர்காமர் கூறுகிறார்? சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிக்கும் வேலைகள் யாவும் முடிந்துவிட்டதா? அழிந்துபோன பகுதிகள் புனரமைக்கப்பட்டுவிட்டனவா? அப்படியானால் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படு வதற்கான சூழ்நிலைகள் தோன்றியுள்ளனவா? அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கு மீண்டும் வந்திருந்தார். சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பலவற்றுக்கும் நேரில் சென்று பார்வையிட்ட எரிக் சொல்ஹெய்ம் மக்களையும் நேரில் சென்று சந்தித்துப்பேசினார்.

சமாதான முயற்சிகள் பற்றிப் பேசவில்லை. இயற்கை அழிவுகளைப் பற்றியே இப்பொழுது கவலைகொண்டிருப்பதாக சொல்ஹெய்ம் சொன்னார். இந்தச் சமயத்தில் இந்தியா சென்ற அமைச்சர் கதிர்காமர் - ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியாக இருந்தபோது தொடக்கி வைத்த இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய பேச்சை கதிர்காமர் தொடர்ந்து நடத்தி, முற்றுப்பெறாமல் இருந்தது. சுனாமி அழிவுக்குப்பின் கதிர்காமர் இந்த ஒப்பந்தத்தைப் பூரணப்படுத்தி விரைவில் கைச்சாத்திடப்படுவதற்குத் தயார்படுத்தியிருக்கிறார்.

இதேவேளை கிழக்கில் மீண்டும் கொலைகளும், கொலை மிரட்டல்களும் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த கொலைகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் தொடர்பிருப்பதாக புலிகள் கூறும் குற்றச்சாட்டில் உண்மை இல்லையென்று ஜனாதிபதி சந்திரிகா மறுத்திருக்கிறார்.

ஆனால், அரசின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அதாவது - அவர்கள் பாஷையில் சொன்னால் விடுவிக்கப்பட்ட பகுதியில் விடுதலைப் புலிகளின் - மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியின் முக்கிய தலைவர் கௌசல்யன், தமிழ்க் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கொலைக்கும், தங்களுக்கும் தொடர்பில்லையென்று மறுப்பதுடன், அவர்கள் பொறுப்பு முடிந்துவிட்டதா? இராணுவ முகாம்களுக்கிடையில் அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்த கொலைகளுக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கில்லையா?

போர்நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் காலத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் கொலைகளுக்கு யார் பொறுப்பு? அக்கரைப்பற்றுப் பகுதியில் ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த நிராயுதபாணிகளான பெண் போராளிகள் மூவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டிருக்கிறார்கள். கொழும்பு சிங்கள ஆங்கில ஊடகங்கள் 'விடுதலைப் புலிகள் போருக்குத் தயாராகி வருவதாகவும், அவர்களிடம் போர் விமானங்களிருப் பதாகவும் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

இவற்றை வைத்துத்தானா இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கான நேரம் வந்துவிட்டதென கதிர்காமர் கூறியிருக்கிறார். இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்புக்கோரி தமிழீழத் தலைவர்கள் தமிழர் தாயகத்தில் 1949 ஆம் ஆண்டு தொடக்கம் 1976 வரை காந்தி காட்டிய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தியபோது, சிங்கள பௌத்த ஆதிக்க சக்திகள் ஆயுத பலம்கொண்டு தமிழினப் படுகொலையில் இறங்கி, இனத்தையே படிப்படியாக அழித்தனர். தமிழினப் படுகொலையைத் தடுத்து, தமிழ் மக்கள் தமது மண்ணில் சுதந்திரமாக வாழவே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினர். இதையெதிர்த்து நிற்கமுடியாத சிங்கள பௌத்த ஆதிக்க சக்திகள் சூழ்ச்சியாக 1987 இல் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து, இந்தியப் படைகளைக் கொண்டு தமிழின ஒழிப்பில் ஈடுபட்டன. இன்னும் இதே சூழ்ச்சியில் இந்தியாவை மீண்டும் தமிழ்மக்களுக்கு எதிராகச் செயற்படத் தூண்டுகின்றன. இந்தியா மீண்டும் மாட்டிக் கொள்ளுமா? நம்மவர் சிலர் பகடைக்காய்களாக நின்று பலிகொடுக்கப்போகிறார்களா?

சமாதான முயற்சி, சமாதானப் பேச்சுவார்த்தை, சுனாமி அழிவு நிவாரண உதவிகள், புனர்வாழ்வு புனரமைப்பு என பேசிக்கொண்டிருந்தாலும் - உண்மையான நோக்கம் சிங்கள, பௌத்த ஆதிக்க சக்திகளுக்கு தமிழீழம் தலையெடுத்து நிற்கக்கூடாதென்பதும் அடக்கியொடுக்கி அடிமைப்படுத்த வேண்டும் என்பதும்தான் அவர்களுடைய செயல்களில் தெரிகிறது. ரணிலின் ஐ.தே.முன்னணி என்றாலும் சந்திரிகா அம்மையாரின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்றாலும் தமிழின அழிப்புத்தான் நோக்காக இருக்கிறது. கதிர்காமரின் உரையும் இதையே எடுத்துக்காட்டுகிறது.

## வாசகர் நோக்கு

### திருத்தப்படுமா மலசலகூடங்கள்?

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் - சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் - இயற்கை உபாதைகளால்வேறு துன்பப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கென இருந்த மலசலகூடத் தொகுதி முற்றாகச் சேதமடைந்து, பயன்படுத்தமுடியாத நிலையில் இருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று மாதங்களாக பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் இந்த மலசலகூடங்களைத் திருத்துவதற்கு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் நோயாளர்கள் தமது இயற்கை உபாதைகளைத் தீர்க்க முடியாமல் இருப்பதுடன், நோயாளர்களாக இருப்பதால் உடனடியாக வேறு இடங்களைத் தேடிச் செல்லவும் முடியாமல் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்கள் மேலும் நோயைத் தேடிக்கொள்ளும் நிலைதான் ஏற்படுகின்றது. இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுவே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

ஜெராட் - ஆனைக்கோட்டை

பகுதி 51 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

''நீங்கள் எங்கை திரும்பி இருக்க விரும்புறீர்கள்?'' ஒரு சிலர் இதே கிராமத்தில இருக்கச்சம் மதிச்சிருக்கிறாங்கள். என்னையும் சேர்த்து நூறு குடும்பங்கள் பூந கருக்கு மேல் பனிச்சையடிக்குளம் என்ட இடத்துக்கு மேல மோட்டுக் காட் டுச்சேனையெண்டு ஒரு திடல் பகுதியொண்டு இருக்குது. அங்க விவசாயம் செய்யக் கூடிய இட முமிருக்குது. அங்கை போக விருப் பம் தெரிவிச்சிருக் குது.

இப்ப இருக்கிற இந்த இடத் தில இது மட்டும் தான் உயரம். அங்கால உயரமில்ல. அங்கால ஆறு. இன் னொரு போது விபத்து நடந்தா, நம்மட காலம் தான் போட்டுது. இளம் சந்ததிகள் என்ன செய்யி றது எண்டு தான் அந்த இடத்தை தெரிவு செய்திருக்கிறம். அவங்க ளும் எங்களுக்கு குடியமர எந்த இடம் விருப்பமோ, அதுக்கேத்த ஒழுங்கைச் செய்து தாறதெண்டு சொல்லியிருக்கிறாங்கள்.

இவருடனான உரையாடலை முடித்து உயிரிழந்தோரின் விப ரங்களைத் திரட்டினேன்.

இலங்கைத் துறையில் வைரன் குமாரி (வயது 65), வெருகல் முகத் துவாரத்தில் ஆனந்தன் இரத் தினமலர் (வயது 25), ஆனந்தன் விஜிதா (வயது 08), ஆனந்தன் சுஜிதா (வயது 08), உதயகுமார் சுலோசனா (வயது 06), நாக ராசா வதனி (வயது 13), கந்தையா அன்னமுத்து (வயது75)

நேசதுரை துளசி (வயது 08) முத்தையா கனகரத்தினம், (வயது 68), ஆனந்தன் ரஜிதா (வயது 03), விஜயகுமார் தவநேசன் (வயது 03), மதியழகன் மதன ரூபன் (வயது 06), யோகராசா ரஜிதன் (வயது 03), கதிராமன் நமசிவாயம் (63), காளி ராசா இந்துஜன் (வயது 03), பத்தக் குட்டி சின்னப்பிள்ளை (வயது 89), சந்திரசேகரம் மனோன்மணி (வயது 86), செல்லத்தம்பி பூமணி (வயது 66), அல்லிராசா அனுசாந் (வயது 03), அல்லிராசா புஸ்பமலர் (வயது19), கணபதிப்பிள்ளை மயில்வாகனம் (வயது 90), செல்வரத்தினம் தனோ ஜினி (வயது 04), கைலாய பிள்ளை மனோன்மணி (வயது 89), கந்தன் அருணாசலம்(வயது 85) ,தம்பிராசா கமலாபதி (வயது 53), வேலாயுதம் இதயக்கனி (வயது 09),வேலாயுதம் அன்னக்கிளி (வயது 32),காளிராசா நிசாந்தினி (வயது 12), சிறிபால் றஜிதா (வயது 07), செல்வானந்தம் நதீஜா (வயது 03), செல்வானந்தம் நிருஜன் (வயது 05),செல்வானந்தம் தினேஸ்நாதன் (வயது 10), ரவிச்சந் திரன் கிருசாந்தி (வயது 01), கார்த் திகேசு தங்கரெத்தினம் (வயது 47), செல்வரெத்தினம் நிலக்ஷனா (வயது 01) ஆகியோர் உயிரிழந்த னர்.

இலங்கைத்துறை முகத்து வாரத்தில் நல்லையா ராசம்மா (வயது 65), சித்திரவேல் பொன் னம்மா (வயது 70), ஆகியோரும், ஆனைத் தீவில் விநாயகமூர்த்தி உமாபதி (வயது 16), ஜமுனா துஷாந்தினி (வயது 08), ஜமுனா யுகன் (வயது 03), ஜமுனா ஜனுசன் (வயது 01), சாந்தகுமார் சங்கீதா (வயது 12), அல்லிராசா புஸ்பமலர் (வயது 20), பெனடிற் பவி (வயது 09), பெனடிற் வெலின்யூட் (வயது 06), பெனடிற் அன்ரூ (வயது 03), கதிர்கா மத்தம்பி சண்முராசா (வயது 38), சோமசுந்தரம் பாக்கியம் (வயது52), கறுக்கா முனையில் மயில்வாகனம் துரை நாயகம் (வயது 38), சிவநே சன் சதீஸ்வரன் (வயது 11) ஆகி யோரும் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ந்து மூன்று பிள்ளைக ளின் தந்தையான கேதீஸ்வரன் (வயது 28) என்பவரிடம் உரையாடி னேன்.

"நீங்கள் என்ன தொழில் செய்த நீங்கள்?''

நான் கடற்தொழில்தான் செய் தது.

உங்கடபோட், வலைகள் என்ன மாதிரி?

போட் எஞ்சின் எல்லாம் சரி.

நான் அண்டைக்கு வீட்டுக் குள்ள இருக்கேய்க்குள்ள என்ர பொம்புள சொன்னா கடல் இரையு தெண்டு. நான் சொன்னன் கச் சான் காத்து கொண்டுபோய் விழுது, கடல் இரையுதெண்டு. திரும்பி கடல்பொங்கி வருதெண்டா! வெட் டைக்கறங்கிப் பார்த்தேன் வருகு தான். வீட்டுக்க இறக்கி கிடந்த சாமானெல்லாம் பிறக்கி கிறக்கி எடுத்தன். வேலிக்கருகே வந்துட் டுது. எல்லாச்சாமானையும் போட் டுட்டு பொம்புள்ளைய கூட்டித்து ஓடினதுதான். மீன் வியாபாரி வந் தான். வெடி கேட்ட தெண்டு அவண்ட பெட்டிக்குள்ள தான் எங்கட புள்ள கள போட்டு அனுப்பினது. எடுத் துட்டு ஓடு சாமியார் என்று அவர் எடுத் துட்டு ஓடினார் நாங்கள் வீரிட்டு ஓடினதுதான். நாங்க வீரிட்ட சத்தத்தில தான் மற்றாக் களெல் லாம் தப்பினதுதான்.

இஞ்சை வந்து மூன்று நாளா வெறுமேலோட சறத்தோடதான கிடந்தனான். அதுக்குப்பிறகு தான் உடுப்புகள் கிடைச்சது. திருகோ ணமலையில் இருந்து முகுந்தன் தான் சாமான் கொண்டந்து தந்த வர்.

அதுவரைக்கும் இஞ்ச கிடந்த வெள்ள நிவாரணச் சாமான்க ளிளைத் தந்தவை.

இஞ்சை கொஞ்ச குடும்பந் தான் இருக்குதெண்டு இஞ்சத்த PHI பிறகுதான்வெள்ளைக் காரரும் நிறுவனங்களும் வந்து பார்த்து மருந்து தந்தவை.

(தொடரும்)

வாரநோக்கு யாழவன்

# நரித்தனமான அரசியல் வாதிகளால் பரப்பப்படும் தவறான கருத்துக்கள்!

அரசிலிருந்து விலகிப்போவ தாக ஜே.வி.பி மிரட்டல். இலங்கை தொழிலாளர் காங்கிரசினர் அமைச்சு பதவிகளை இராஜினாமாச் செய்து விட்டு அரசை விட்டு விலகினர் என கடந்த வாரம் அரசை ஆட்டம் காண வைக்கும் வாரமாகவே கடந்து சென்றிருக் கிறது.

அதேவேளை மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராகவுள்ளதாகவும், இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாகவும், பேசுவதற்கு அரசு பரிசீலனை செய்து வருவதாகவும், அரசின் சமாதான செயலக பணிப் பாளர் ஜயந்த தனபாலவை மேற்கோள் காட்டி செய்திகளும் வெளிவந்துள்ளன. இதனை அடிப் படையாகக் கொண்டே இடைக் கால நிர்வாகம் தொடர்பாக பேசுவதிலே ஆரம்பம் முதலே எதிர்ப்பு காட்டிவரும் ஜே.வி.பி, அரசுக்கு எதிரான அதிலும் குறிப் பாக சுதந்திரக் கட்சிக்கு எதி ரான தனது எதிர்ப்பை வலுப்படுத்தியுள் ளது.

ஆனால் தொழிலாளர் காங் கிரசினர் அரசிலிருந்து விலகிய தற்கு இதுவரை தெளிவான கார ணம் எதுவும் வெளியிடப்பட வில்லை. ஆரம்பத்திலே அரசுடன் இணைந்து கொண்ட போதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெளிவான நியாயப்பாடு எதனையு மே முன்வைக்கவில்லை. அதன் தலைவர் ஆறுமுகம் தொண் டமான் செய்த ஊழல்கள் வெளியே வராமல் மறைப்பதற்காகவே அரசு டன் அவசர அவசரமாக இணைந்து கொண்டார். ஆனால் சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பிலே அரசுக்குள்ள நெருக் கடியை தவிர்த்து, அரசினுடைய நாடாளுமன்ற பலத்தை அதி கரிப்பதற்காகவே தாம் அரசுடன் இணைந்து கொண்டதாக கதை விடப்பட்டது.

அதன் பிரகாரம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசு டன் இணைந்த பின்னர் சமாதான முயற்சிகளிலே முன்னேற்றம் ஏற் பட்டிருக்க வேண்டும். ஆனால் அணுவளவேனும் முன்னேற்றம் ஏற்படாமல், மாறாக பாரிய பின்ன டைவுகளை ஏற்பட்டன.

ஆனால் தற்போது சர்வதேச சமுகத்தின் அழுத்தம் காரணமாக மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வந்துள் ளது. அத்துடன் இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாக பேசுவதற்கும் அரசு தயாராக உள்ளதாகவும் அறிவிக்கப்படுகி றது. இந்த நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசை விட்டு விலகியிருக்கிறது.

இது சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலே அரசுக்குக் காட்டி வரும் அக்கறை யின் அளவையும், இனப்பிரச்ச னைக்கு சமாதான வழியிலான தீர்விலே அது கொண்டுள்ள கரிசனையையும் நன்கு புடம் போட்டு காட்டுகிறது. பாவம் மலை யமக்கள் பச்சோந்தி அரசியல் வாதிகள் சிலரிடம் தமது வாழ்வை அடைவு வைத்துவிட்டு அதனை மீட்பதற்கு வழிதெரியாதவர்களாக திகைத்து நிற்கிறார்கள்.

இது இவ்வாறு இருக்க, இடைக் கால நிர்வாகம் தொடர்பாக அரசு பேசத் தயாராக உள்ளதாகவும் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு, கொழும் பினுடைய உண்மையான தெளி வான நிலைப்பாடாக இல்லையென விடுதலைப்புலிகள் அதிருப்தி வெளி யிட்டுள்ளனர்.

அரசு சர்வதேச சமுகத்தை திருப்தி படுத்துவதற் காகவும், தற்போது எழுந்துள்ள முரண்பா டான சூழ் நிலையை தணிப்பதற் காகவுமே இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ளதாக அவர்கள் கருது கின்றனர். இதனாலேயே இந்த முடிவை அரசு எழுத்து வடிவிலே நோர்வே அனுசரணையாளர்களு டாக தெரிவிக்கவேண்டுமென விடு தலைப்புலிகள் கருதுகின்றனர்.

மேலும் இந்த அறிவிப்பானது நாட்டினுடைய தலைவியாகவும் தற்போதைய அரசினுடைய பின் புல தலைவியாகவும் உள்ள ஜனாதிபதி சந்திரிகாவினால் விடுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் பல அரசியல் சாணக்கியங்களும் உள்ளன.

ஜனாதிபதி நேரடியாக இது தொடர்பாக கருத்து வெளியிட்டு, பின்னர் அதனை முன்னெடுக்க முடியாமல் போகுமானால் சர்வ தேச ரீதியிலான எதிர்ப்பை சம்பா திக்க வேண்டிவரும்.

இது அரசுக்கான ஆதரவை யும், நிதியுதவிகளையும் மேலும் குறைத்து விடும் எனவும் கருதி சமாதான நடவடிக்கை தொடர் பிலே தனித்து முடிவெடிக்கும் அதிகார வலுவற்ற சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபால ஊடாக இந்தக் கருத்தை வெளியிடுதல் ஆனது, எதிர்காலத் திலே எழும் சிக்கல்களை தவிர்க்க உதவும் எனவும், அரசு திட்டமிட்டு அதற்கேற்ற வகையிலே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

ஆனால் எப்போதுமே உறுதியு டனும், தெளிவுடனும், நிதானத் துடனும் செயற்பட்டுவரும் விடு தலைப்புலிகள் அரசினுடைய அறி விப்பை எடுத்த எடுப்பிலே ஏற் றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. இது தொடர்பிலே அர சினுடைய தெளிவான கருத் தையே அவர்கள் எதிர்பார்க் கின்றனர். எதிர்காலத்திலே எழும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கா கவே அவர்கள் இந்த நிலைப் பாட்டிலே உறுதியாக உள்ள னர்.

ஏற்கனவே அரசு வடக்கு - கிழக்குப் பகுதிகளை சுனாமி கடற்கொந்தளிப்பு புனரமைப்பு பணிகளின் போது புறக்கணித்து வருகிறது. வெளிநாட்டு பிரதி நிதிகளைக் கூட தென்னிலங் கையின் பகுதிகளுக்கு மட்டுமே அழைத்துச்சென்று அழிவுகளைக் காட்டிய பின்னர், திருப்பியனுப்பி விடுகிறது.

அவர்களும் அம்பாந்தோட்டை யிலும், காலியிலும் தான் அதிகள வான அழிவுகள் என எண்ணிக் கொண்டு சென்று அதற்காகவே தாம் சார்ந்த அமைப்புக்கள் மத்தியிலே சிபாரிசுகளும் செய்து வருகின்றனர். இந்தப் பாரபட்சமான நிலையைத் தெளிவுபடுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்காமல் உள்ளன.

அத்துடன் இலங்கையில் உள்ள சில நரித்தனமான அரசியல்வா திகளின் செயற்பாடுகள் காரண மாகவும், வடக்கு - கிழக்கு நிலைப் பாடுகள் தொடர்பாகவும் தவறான கருத்துக்கள் சர்வதேச சமூகத் தின் மத்தியிலே பரப்பப்பட்டு வருகிறது. அரசுகள் என்றும் அரசுகளையே திருப்தி செய்யும் என்ற தத்துவத்தின் அடிப்படை யிலே சர்வதேச நாடுகளும், அமைப்புகளும் அரசினுடைய கருத் தையே உண்மையென நம்பி, அதனை அடிப்படையாகக் கொண் டே தமது முடிவுகளையும் எடுத்து வருகின்றன.

அண்மையில் கூட ஐ.நா செய லாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலே - விடுதலைப் புலிகளுடைய உயர்மட்டத் தலைவர் களினுடைய சர்வதேசப் பயணங்க ளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரி விக்கப்பட்டுள்ளது. சிறுவர்களை படையில் சேர்த்துக் கொள்வது விடுதலைப்புலிகள் கடைப்பிடித்து வரும் நிலைப் பாட்டினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும், இதற்குப் பின்னால் பல அரசியல் ரீதியிலான இராஜதந்திர நகர்வுகள் உள்ளன.

ஏனெனில் சில மாதங்களுக்கு முன்னர் சிறுவர் உரிமைகள் தொடர் பாக ஐ.நா வெளியிட் டுள்ள அறிக் கையிலே விடுதலைப்புலிகள் அமைப்பு சிறுவர் உரிமைகளை மதித்து நடப்ப தாகக் கருதி, அந்த அறிக்கையிலே விடுதலைப்புலிகளி னுடைய பெயர் விடுபட்டு இருக்கி றது. ஆனால் தற்போது மீளவும் கவனத்துக்கு உள்ளாக்கப்பட் டுள்ளது. இது இலங்கையிலுள்ள சில அரசியல் வாதிகளால் ஏற்ப டுத்தப்பட்ட நகர்வுகளின் வெளிப் பாடாகவே இருக்க வேண்டும்.

சுனாமி கடற்கொந்தளிப்பில் பெற்றோரை இழந்துள்ள பிள் ளைகளின் நலனைக் கவனிப்ப திலே விடுதலைப்புலிகள் தீவிர கவனம் செலுத்தி செயற்பட்டு வரும் வேளையில், இவ்வாறான அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளமையானது வேதனைக் குரிய விடயமாகும்.

தனது இயக்கத்திலே இணை யும் பதினெட்டு வயதுக்கு குறைந்த சிறுவர்களை அவர்களது பெற் றோர்களிடம் மீள ஒப்படைத்து வரும் நிலையிலே ஐ.நா.வின் அறிவிப்பு அர்த்தமற்றதாகக் கூட இருக்கலாம். இது விடுதலைப் புலிகள் அமைப் பைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நாடுகள் மத்தியிலே எடுபடாத கருத்தாகக் கூடப் போகலாம்!

## தவக்கால நற்சிந்தனை

**"பிள்ளைகளே! செல்வர்கள் இறையாட் சிக்கு உட்படுவது மிகவும் கடினம்"** *(மாற்.10:24)*



'காசேதான் கடவுளடா', 'பணப்பாதாளம் மட்டும்', 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற பழமொழிகள் நிறைந்த இந்த உலகத்தில் பணம் உங்களைப் பரலோகம் சேர்க்காது என்றும் - கடவுளுக்கும், செல்வத் துக்கும் ஒருசேர ஊழியம் செய்ய முடியாது என்கிறார் நம் ஆண்டவர். காரணம் பணவெறி கொண்ட பணக்காரர்கள் தவறான வழியில் பொருள் சேர்க்கிறார்கள். ஏழைகளுக்கு இரங்காதவர்கள் படைத்த இறைவனையும் அவருடைய கட்டளைகளையும் மறந்து தனது செல்வத்தைக் கொண்டு பலதீய செயல்க ளில் ஈடுபடுகிறார்கள். பல பெண் களைத் தங்கள் காமப்பசிக்கு இரையாக்குகிறார்கள். இவர்கள் இறைவனை அடைவது அரிது என்கிறார். பண ஆசை இறைவனிட மிருந்து வரவில்லை. சாத் தானிடமிருந்தே வருகிறது. பணம் நமது வாழ்வுக்குத் தேவைதான். ஆனால் பணத்தின் மீது மிதமிஞ்சிய பற்றுக் கூடாது. அது அவனைப் பாவத்தில் விழுத்தும். அருள் இன்றி விண்ணகம் சேர முடியுமா?

மோ. தார்சீசியஸ்

# தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்குகின்ற சிங்கள பேரினவாதிகளுக்கு எதிராக அணிதிரளுங்கள்

## குடாநாட்டு பொது அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**வட-கிழக்கில் இராணுவ கட்டமைப்பை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் தமிழ்மக்கள் அணிதிரள வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யாழ். குடாநாட்டின் பல்வேறு தரப்பினரும் அழைப்பு விடுத்துள்ளனர்.**

**இந்தக் கண்டனப் பேரணி தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கைகள் வருமாறு-**

### நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா

அரசும் – தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. பேச்சுவார்த்தை நின்று 22 மாதங்களாகிவிட்டன. ஒஸ்லோ தீர்மானம், ரோக்கியோ பிரகடனம் எனும் பின்னணியில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றைத் தமிழ் பேசும் மக்கள் தாயகத்தில், வடக்கு–கிழக்கு மாநிலத்தில் நிறுவி, போரினால் பாதிக்கப்பட்ட தேசத்தினதும் மக்களினதும் புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளை முன்னெடுக்க, சிங்களப் பேரினவாதம் எதிர்ப்புத் தெரிவித்துவருகிறது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவப்பட்டிருந்தால், சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் – முஸ்லிம் மக்களுக்கு, தமிழர் தாயக மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் சர்வதேச நாடுகளின் உதவிகள் நேரடியாகக் கிடைக்கவும், பயன்படுத்தவும் முடிந்திருக்கும்.

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணப் பணிகளுக்காக மனிதாபிமான உதவிகளைப் பயன்படுத்தத் தமிழர் தாயகத்தில் அரசும்–விடுதலைப் புலிகளும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திட சர்வதேச சமூகம் அரசுக்கு ஆலோசனையும், நெருக்குதலும் கொடுத்துவருகின்ற பொழுதும், இரண்டு மாதங்கள் கடந்தும் அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மாறாக மத்தியில், ஜனாதிபதி மாளிகைக்குள் அதிகாரத்தைக் குவிப்பதிலும், அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி வடக்குக் கிழக்கில் இராணுவ நிர்வாகத்தை ஏற்படுத்துவதிலும் அரசு ஈடுபட்டுள்ளது.

மனிதாபிமான உதவிகள் மத்தியில் குவிந்துகொண்டிருக்கும்போது, நவீன போர் ஆயுதங்களைக் குவிப்பதிலும், பாதுகாப்பு உடன்படிக்கைகளைச் செய்வதிலும் அரசு தீவிரமாகச் செயற்படுகிறது.

போர்நிறுத்த காலத்தில் அரசின் நடவடிக்கையானது தமிழர் தரப்பின் சமபலத்தைக் குலைப்பதாகவுள்ளது. கொள்கை மாறிப்போன தமிழ்க்குழுக்களைப் பயன்படுத்தி, தமிழர் தாயகத்தைப் பிளவுபடுத்துவதிலும், ஜனநாயக சக்திகளையும், இராணுவ பலத்தையும் சீர்குலைப்பதிலும் அரசும், அதன் புலனாய்வுத் துறையும் செயற்பட்டு வருகின்றன. போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப் பிடித்துவரும் தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பணியாளரொரையும், ஜனநாயக சக்திகளையும் கொலை செய்து வருகின்றனர்.

அதேநேரத்தில் போர்நிறுத்த ஒப்பந்ததின் உயிர்நாடியாய் உள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை. வடக்கு – கிழக்கு மாநிலத்தின் கரையோரப் பிரதேசங்களும், வேளாண்மை விளைச்சல் நிலங்களும், குடியிருப்புநிலங்களும் உயர்பாதுகாப்பு வலயங்களாக தொடர்கின்றன. லட்சக் கணக்கான மக்களின் மீள்குடியேற்றமும், வாழ்வுரிமை உட்பட அடிப்படை உரிமைகள் யாவும் இராணுவ ஆக்கிரமிப்பினால் மறுக்கப்பட்டுள்ளன.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் உட்பட சர்வதேசத் தலைவர்கள் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு–கிழக்கு மக்களையும் அழிவுகளையும் பார்வையிட முற்பட்டபோது, மனிதாபிமானமற்ற முறையில் அந்தத் தலைவர்களைத் தடுத்து நிறுத்தப்பட்டனர். மனிதாபிமானமற்ற, நாகரிகமற்ற தென்னிலங்கைச் சிங்கள அரசின் இத்தகைய நடவடிக்கைகள் சர்வதேச நாடுகளின் கவலைக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்த்தேச மக்கள் சர்வதேசத்தின் கவனத்தை மேலும் ஈர்க்கவேண்டும். சுனாமிப் பேரலையைப் பாதிப்புற்ற மக்களின் மனிதாபிமான அடிப்படைத் தேவைகளைக்கூட இப்பேரினவாத அரசு நிறைவேற்ற மறுக்கின்றது.

மேலும் அதிகாரங்களைக் குவித்து ஆட்சியிலிருக்க, போராயுதங்களை இறக்குமதி செய்தும், பாதுகாப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்தியும், வடக்கு–கிழக்கில் இராணுவ நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தவும், தமிழ்த்தேச மக்களின் 50 ஆண்டு கால உரிமைப் போராட்டத்தை ஒடுக்கவும் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு எதிராக தமிழ்த் தேச மக்கள் அணிதிரளவேண்டும். எனவே வடக்கு–கிழக்கு மாநிலம் அம்மாநில மக்களின் தாயகம் என்பதையும் – அத்தாயகத்தின் ஒருமைப்பாட்டையும், மக்களின் ஒற்றுமையையும் வெளிப்படுத்தவும் இன்று வட மாநில மக்கள் அணிதிரண்டு பேரணியில் எழுச்சியுடன் உரிமைக்குரல் எழுப்புமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

கசப்பான கடந்தகால அனுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டு இலங்கை அரசு தமிழர்களின் சுதந்திர – சுயநிர்ணய உரிமையை மதிக்கவேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து, மக்களின் வாழ்விடங்கள், பொருள்சார் மையங்கள், பணிமனைப் பிரதேசங்களிலிருந்து படையினர் மீளப்பெறப்பட்டு, மக்களின் இருப்புக்கள் உறுதிசெய்யப்பட்டு, இயல்புநிலையைத் தோற்றுவிக்க வேண்டும். கடல் வலயச் சட்டங்கள் மூலமான தடைகள் நீக்கப்படவேண்டும். மேலும் சுனாமிப் பேரழிவில் பெருமளவு பாதிக்கப்பட்ட, வாழ்வுக்காக ஏங்கும் வடக்கு–கிழக்கு மக்களுக்குத் தென்னிலங்கை மக்களுக்கு ஒப்பான நிவாரணப் பணிகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். வெளிநாட்டு நிவாரண உதவிகள் பாரபட்சமற்றமுறையில் மக்களின் புனர்வாழ்வு–புனரமைப்புப் பணிகளுக்கு வழங்கப்பட வேண்டும். வெளிநாட்டு நிதியுதவிகளை, இராணுவப் பரவலாக்கத்திற்கோ அன்றி ஆயுதக் கொள்வனவுக்கோ வழங்கப்படுதல் தவிர்க்கப்பட்டு, இராணுவமயம் என்ற அச்சுறுத்தலை நீக்கி இலங்கை சமாதானப் பிராந்தியம் என்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்கவேண்டும். கடற்கரைப் பரப்புக்களிலிருந்து 200 மீற்றர் குடியிருப்புக்களை சுனாமியின் பேரால் உள்வாங்குவதும், அவ்விடங்களில் இராணுவப் பரம்பல்களை ஏற்படுத்துவதும் தவிர்க்கப்படவேண்டும். தினசரி சுனாமி என்ற மாயையின் பேரால் மக்கள் குடியிருப்புக்களுக்கு இராணுவ வேலிகள் உருவாகக் கூடாது. இந்தப் பேரலை இராணுவத்துக்கும் விதிவிலக்கல்ல என்ற உண்மை மக்களுக்கு எழுவது இயல்பே.

எனவே தமிழ் மக்களுக்கான மீள் கட்டுமானப் பணிகளை அவர்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் இணைந்து முன்னெடுப்பது ஏற்புடையதொன்றே. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தமிழர் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லையானால், தமிழர்கள் தங்கள் வாழ்வியல் முன்னேற்றத்தைத் தீர்மானிக்கத் தள்ளப்படுவார்கள். ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டுத் தன்னாட்சி உரிமைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எதிர்காலம் யுத்தசூழ்நிலையைத் தோற்றுவித்தால், இந்த நாடு கடந்தகால அனுபவங்களிலிருந்து பொருளாதாரம் – அரசியல் – சமூக ஏற்றங்களிலிருந்து எழப் பல்லாண்டுகள் நீடிக்கும்.

எமது மக்களின் அபிலாசைகளைச் சர்வ உலகமும் அறியவைக்கும் இன்றைய எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்ள அணி திரள்வீர். ஒற்றுமையே எமது பலம் என்ற உணர்வோடு எமது கோரிக்கைகளை வென்றெடுக்க இன்றைய பேரணி புதியசேதி சொல்லும்.

### நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

மூன்று ஆண்டுகளுக்கிடையில் நாட்டில் உண்மையான அமைதி ஏற்படவில்லை. மாறாக போலிப்பாதுகாப்பு உணர்வுதான் நாட்டில் நிலவுகின்றது. அமைதியை சிங்கள மக்களும் விரும்புகின்றார்கள். தமிழ் மக்களும் விரும்புகின்றார்கள். ஆனால் தமிழ் மக்கள் விரும்புகின்ற அமைதி தற்பாதுகாப்போடும் தன்மானத்தோடும் இணைந்த அமைதியே.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிங்கள இராணுவம் இங்கு நிலைத்து குடிகொண்டுள்ள நிலையில், இங்குள்ள உழவர்கள் வேளாண்மையிலும், பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபடமுடியாதநிலை ஒருபுறம்– கடலில் மீன்பிடிக்கமுடியாத மீனவர்களின் தவிப்பு மறுபுறம். பொதுமக்களோ தம் வீடுகளில் மீண்டும் வாழ்வுபெறமுடியாது தம் காணிகளின் எல்லைக்கோடுகள் சிதறடிக்கப் பட்டநிலையில் தாமும் தம் முன்னோரும் வாழ்ந்த மண்ணில் மீளவும் குடியேற முடியாதுள்ளது. இருபது ஆண்டுகளுக்குமேல் போரினால் சீரழிந்த தமிழினம் சுனாமி என்ற பெரும் பேயாட்டத்தினால் தமிழீழமண்ணில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் உயிர்களையும் வீடு வாசல்களையுமிழந்து ஐயோ என்று அலறுகின்ற காட்சியையும் காண்கின்றோம். சுனாமி ஏற்பட்டு 2மாதம் உருண்டோடிய நிலையிலும் இன்று எதிர்காலம் என்னவென்று தெரியாது மக்கள் தவிக்கின்றனர். ஈவிரக்கமற்ற சந்திரிகா அரசு துன்பத்தால் துடிக்கின்ற மக்களுக்கு துணைநிற்பதற்கு மாறாக வெளிநாடுகள் தந்துவருகின்ற உதவிகளைக் கூட இங்கு வரவிடாமல் தடுத்துநிற்கின்ற கொடிய காட்சிகளையும் ஐ.நா.மன்றத்தின் செயலாளர் நாயகம் உட்பட்ட உலகத் தலைவர்கள் எவரும் இங்கு வரமுடியாதபடி தடுக்கின்ற குரோதப்போக்கையும் நாம் காண்கின்றோம். அரசின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கிழக்கு மாகாண அரசியற்துறை பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரையும் படுகொலை செய்தவர்கள் இராணுவத்துடன் இயங்கும் துணைப் படையே என்பது வெளிப்படை. இதனைச் அரசு வெளிப்படையாகக் கண் டிப்பதுபோல் பாசாங்கு செய்தபோதும், இப் படுகொலையைக் கண்டித்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்கள்மீது கண்டனம் தெரிவிப்பதானது அரசின் உண்மை முகத்தை வெளிக்காட்டுகின்றது. எனவே தமிழ் மக்கள் பிரச்சினையில் உடனடியாக இடைக்காலத் தீர்வை வழங்குவதன் ஊடாக, ஒரு மாற்றத்தை அரசு ஏற் படுத்தவேண்டும். மாறாக தொடர்ந்தும் இழுத்தடிப்புக்களையும், திட்டமிட்ட படுகொலைகளையும், கலாசார சீரழிவுகளையும் தமிழர்மீது திணிப்பதிலேயே அரசு முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது. எனவே தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் மாபெரும் மக்கள் புரட்சியின் மூலமாக எம்மை மேலும் பலப்படுத்தி, எமது நிலையை அரசிற்கும், சர்வதேச உலகிற்கும் வெளிக் கொணரவேண்டிய கட்டாயநிலை இன்று எம்முன் தேவையாக உள்ளது.

எனவே எமது உரிமைகளை வென்றெடுக்க இன்று காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வாயிலில் இருந்து ஆரம்பமாகும் மாபெரும் கண்டனப் பேரணியில் இணைந்துகொள்வோம்.

### நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன்

தமிழ் மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம், தமிழ்ப் பகுதிகளில் உரிமைகள் மறுக்கப்பட்டு, தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்தபோதுதான் வேறுவழியின்றி யுத்தத்தைத் தெரிவுசெய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாங்கள் வேண்டுவது சுதந்திரத்தை. இதனை நாம் உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டும். எமது மன உணர்வுகளை உலகுக்கு வெளிக்காட்டுவதன்மூலம்தான் சர்வதேசத்தின் கவனத்தை எம்பால் ஈர்க்க முடியும். இன்று எமக்குச் சாதகமான சூழல் இருக்கின்றது. ஏற்கனவே பல அணிதிரள்வுகள், பொங்குதமிழ்கள் ஊடாக சர்வதேச மட்டத்தில் எமது குரலை ஒலிக்கச் செய்ததன்மூலம், அவர்களின் கவனத்தை எம்பால் ஈர்த்து வெற்றிகண்டோம். நாம் எவ்வளவுக்கெவ்வளவு அணி திரள்கின்றமோ அவ்வளவுக்கு அவ்வளவு உரமாக எமது குரலை சர்வதேசமெங்கும் ஒலிக்கச் செய்யலாம். எனவே உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு அரசையும்– அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேசத்தையும் இந்நேரம் அறைகூவல் விடுக்கின்றோம் என்பதை யாழ்.மாவடத்திலுள்ள அனைத்து மக்களுடன் பெண்கள் நாமும் ஒரணியில் திரண்டு ஒருமித்து எம் குரலை ஒலிக்கச் செய்வோம். எனவே அனைத்து மாதர் சங்கங்களையும் பெண்கள் அமைப்புக்களையும் பெருந்திரளாகப் பங்குபற்றுமாறு பெண்கள் பண்பாட்டு மையம் அழைப்பு விடுக்கின்றது.

### விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுற்ற சூழ்நிலையில், உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சரத்துக்களை உரியமுறையில் அமுல்படுத்தாது, சமாதானப் பேச்சுக்களை இலங்கை அரசு காலந்தாழ்த்திவருவதைக் கண்டித்தும், எமது நிலைப்பாட்டைசர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவரும் நோக்குடனும், யாழ்.நகரில் நடைபெறும் மாபெரும் கண்டனப்பேரணியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள். பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 2ஆம் படிக்கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றின் தலைவர்கள், நெறியாளர்குழு உறுப்பினர்கள், பொது முகாமையாளர்கள், அங்கத்தவர்கள், கூட்டுறவாளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தமது அன்றாடப் பணிகளை இடைநிறுத்தி, கண்டனப் பேரணியில் கலந்துகொண்டு எமது உணர்வலைகளை தெரியப்படுத்தவேண்டுமென சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்

அரசும் விடுதலைப்புலிகளும் போர் நிறுத்த உடன்படிக்கையை கைச்சாத்திட்டு மூன்று வருடங்கள் கழிந்தும், வடக்கு கிழக்கில் கைது செய்யப்பட்டு காணாமற்போன உறவுகள் பற்றி எந்த தகவலையும் அரசு தெரிவிக்கவில்லை.

இதனால் அல்லற்பட்டு துயரத்தில் நடைப்பிணங்களாய் அலைந்து திரியும் நாம் எமது துயரத்தை அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்த இன்றைய பேரணியில் பங்கேற்போம்.

### பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

சர்வதேச சமூகத்திற்கும், தென்னிலங்கையின் அரசியல்வாதிகளுக்கும் வெளிக்காட்டும் நோக்கத்துடன் பொது அமைப்புகளின் ஒன்றியத்தால் ஒழுங்கு செய் யப்படும் மாபெரும் கண்டனப் பேரணியில் வயது வேறுபாடின்றி ஆண் பெண் பேதமின்றி அனைவரும் ஒன்றுதிரண்டு எமக்கு இலங்கை அரசினால் ஏற்படுத்தப்படும் அநீதிகளை உலகறியச்செய்து, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு வழி செய்வோம். அதன் மூலம் உடனடியாக நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை தொடங்கவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான தேவைகள் நேரடியாகவே எமக்கு கிடைப்பதற்கும், எமது ஏகப் பிரதிநிதிகளை படுகொலைசெய்யும் துரோகத்தனத்தை நிறுத்தவும், உயர் பாதுகாப்புவலயத்தை நீக்கி எமது மக்கள் இயல்பு வாழ்விற்குத் திரும்புவதற்கு வழிசெய்யவும் இப்பேரணியினூடாக எமது கோரிக்கைகளை முன்வைப்போம்.

இக் காலத்தின் தேவையையும் வரலாற்றுக் கடமையையும் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்ட மக்கள் அனைவரையும் இப்பேரணியில் அணிதிரளுமாறு அன்புடன் அறைகூவல் விடுக்கிறோம்.

### தமிழர் ஆசிரியர் சங்கம்

மூன்று ஆண்டு காலம் நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்– எவ்வித அபிவிருத்தியும் ஏற்படுத்தமுடியாத திட்டவரைபற்ற நிலைப்பாட்டினால், சர்வதேச சமூகத்தையும் விடுதலைப்புலிகளையும் ஏமாற்றும் போக்கு சுனாமி பேரழிவுக்கு தெற்கில் ஒரு நிலைப்பாடு, வட–கிழக்கில் பாராமுக நிலை உருவாக்கப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குவதில் அசமந்தப்போக்கு.

இவற்றை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவர நாளை நடைபெறவிருக்கும் பேரணியில் யாழ்மாவட்டத்தில் கடமை புரியும் சகல அதிபர்களையும் ஆசிரியர்களையும் கலந்து கொண்டு, தமிழ்மக்களின் உணர்வலைகளை வெளிக்கொண்டுவர முழுமையான பங்களிப்பை வழங்குமாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்கோரிக்கை விடுத்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசியற்றுறை அலுவலகத்துக்குள் கண்காணிப்பு குழு அத்துமீறியது!

## புலிகள் தரப்பு குற்றச்சாட்டு

வவுனியாவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறை அலுவலகத்தினுள் நேற்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழு வினர் அத்துமீறி நடந்து கொண்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தமிழீழ விடு தலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞான வேல் கருத்துத் தெரிவிக்கையில்–

நேற்று மாலை 2.30 மணியள வில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட இணைப் பாளரும், அவரது உதவி யாளரும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப் பாளரைச் சந்திக்க வந்திருந்தனர்.

அவர்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை போராளிகள் செய்து கொண்டிருந்தபோது அவர்கள் எமது அனுமதியின்றி போராளிகள் தங்குகின்ற தங்குமிடத்துக்கும் எங்களுடைய அலுவலகத்தின் பின் பகுதிக்கும் அவர்கள் அநாகரிகமான செயலாக அத்துமீறி நடந்தனர்.

அப்பொழுது எமது மொழி பெயர்ப்பாளர் இது போராளிகள் தங்குமிடம் என்று சொல்ல அவர் வாக்குவாதப்பட்டு முரண்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது நான் அவர்களிடம் நான் போரா ளிகளின் தங்குமிடமென்று சொல்ல அவர்கள் எங்களுக்கு நாங்கள் எங்கும் போகலாம் என்று கூறி மிக அநாகரிகமாக நடந்து கொண்டார் கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தாம் புலிகளின் அலுவலகத்தை சோதனை செய்ய வில்லை என்று போர்நிறுத்த கண் காணிப்புக்குவினர் தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# முல்லைத்தீவு வர்த்தகர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி!

(முல்லைத்தீவு)

சுனாமியால் ஏற்பட்ட சொத்த ழிவுகள் வழங்கப்படாமை குறித்து முல்லைத்தீவு பிரதேச வர்த்தகர் கள் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.

நேற்று முற்பகல் 11.30 மணியள வில் முல்லைத்தீவு பஸ் நிலைய முன்ற லிலிருந்து முல்லைதீவு மாவட்ட அரச செயலகம் வரை இந்தப் பேரணி இடம் பெற்றது.

இவர்களுடைய கோரிக்கை தொடர்பான மனுக்கள் – கரைத் துறைப்பற்று உதவி அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரிடம் நேரில் கைய ளிக்கப்பட்டன.

மனுவைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் – இது தொடர்பான கோரிக்கை களுக்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இதில் முல்லைத்தீவைச் சேர்ந்த சகல வர்த்தகர்களும் கலந்துகொண் டனர்.

# லக்ஷ்மன் கதிர்காமருடன் சோமவன்ச சந்தித்து பேச்சு

(கொழும்பு)

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்.

வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத் தில் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான விடயம் மற்றும் ஆளும் கூட்டணிக் கட்சி களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரி விக்கப்படுகிறது.

## பெண் போராளிகள்...

நெருக்கடி காரணமாக தொடர்ந் தும் கல்முனை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றார்.

நேற்று இரவு 8.30 மணிக்கு கல் முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மைதானத்தில் தரையிங்கிய ஹெலி கொப்ரரில் இவர்கள் அம்பாறை விமான நிலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தயார் நிலை யில் இருந்த சிறிய ரக விமான மொன்றில் கொழும்பு – இரத்ம லானை விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் அங்கிருந்து அம்பு லன்ஸ் வண்டி மூலம் தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் பயணத்தின்போது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதியொருவரும் சென்றி ருந்தார்.

இவர்களில் மட்டக்களப்பு – அம் பாறை மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் குவேனி மற் றும் துணைப் பொறுப்பாளர் சசிமதி ஆகியோரின் நிலை கவலைக்கிட மாக இருந்தபோதிலும், அகநிலா என்ற போராளியின் நிலை தேறியுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. இந்தச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டோட்டியர் கருத் துத் தெரிவித்தபோது –

இந்தச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் செய்த முறைப்பாட்டின் அடிப்படை யிலேயே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(01)

## றுகுணு பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டது!

றுகுணு பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக பல்கலைக் கழகம் காலவரையறையின்றி மூடப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல்களை பொலிஸா ரால் கட்டுப்படுத்த முடியாத நிலை யில்–கண்ணீர்ப்புகைப் பிரயோ கத்தை மேற்கொண்டதாகவும் இதன் போது 10 மாணவர்கள் காயமடைந் ததாகவும் தெரியவருகிறது. (01)

## எதிரியாக...

கின்றனர். இவ்வாறான சம்பவங்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவோ அல்லது நோர்வே அர சாங்கமோ எந்தவித நடவடிக்கை யையும் எடுக்கவில்லை. ஆனால், இதற்கு எதிர்மாறாக விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக் கைகளை நோர்வே ஊக்கப்படுத்தி வருகின்றது.

கௌசல்யனின் படுகொலை குறித்து அறிக்கையை நோர்வே வெளியிட்டதன் மூலம் இந்த நாடு தொடர்பாக அது இரட்டை நிலைப் பாட்டைக் கொண்டுள்ளதென்பத னையே எடுத்துக்காட்டுகின்றது. நோர்வேயின் இந்த நடவடிக்கை யானது ஒன்றுபட்ட இலங்கைக்கும் மக்களுக்கும் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும்.

இலங்கை தொடர்பான இரட்டை நிலைப்பாடு மற்றும் பயங்கரவாத செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்கு தல் போன்றவற்றை நோர்வே நிறுத்தாவிட்டால் அந்த நாட்டை இலங்கையின் எதிரியாக அறிவிப் பதில் ஜாதிக ஹெல உறுமய எவ் வித தயக்கமும் காட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடக அமைச்சுக்கு வந்த துகள் குறித்து விசாரணை!

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன் றில் காணப்பட்ட துகள்கள் குறித்து பொரளை மருத்துவ ஆய்வு நிலை யத்தில் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இந்த ஆய்வுகள் தொடர்பான அறிக்கை இரண்டு தினங்களுக் குள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப் படும் என்று மருத்துவ ஆய்வு நிலை யப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சில் கடமையாற்றும் கனிஷ்ட ஊழியர் மற்றும் கடிதத்தை பிரித்த ஊழியர் ஆகியோரிடம் வாக்குமூலம் பெறப் பட்டுள்ளதாக கிரிலப்பனை பொலி ஸார் தெரிவித்தனர்.

## போராளிகள் மீது...

கொண்டிருந்தபோது, தம்பிலுவில் சவக்காலைக்கண்மையில் வைத்து உந்துருளியில்வந்த இனந்தெரி யாத நபர்கள் மேற்கொண்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் மூவரும் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

போராளிகள் சென்றுகொண்டி ருந்த முச்சக்கரவண்டியை இடை மறித்துத் தாக்குதல் நடத்திய நபர் அதன்பின்னர் அருகேயுள்ள படை முகாமினுள் சென்றமையும் அவதா னிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை யின் விதிமுறைகளுக்கமைய இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக அரசியல் பணி யிலீடுபட்டுவரும் எமது போராளி கள் மீது தாக்குதலை மேற்கொள் வது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும்.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற வீதியில் விசேட அதிரடிப்படையி னர் சகல வாகனங்களையும் சோத னையிட்டுவருவதால் அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பின்றி ஆயுதக்குழுவினர் இந்தத் தாக்கு தலை மேற்கொண்டிருக்க முடியாது.

படைத்தரப்பின் அனுசரணையு டனும், ஆதரவுடனும் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான தாக்குதல்கள் தடைப்பட்டுப்போயிருக்கும் சமா தான முயற்சிகளை மீள ஆரம்பிப் தற்கும், இயற்கை அனர்த்தத்தி னால் பாதிக்கப்பட்ட எமது மக்க ளுக்கான நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் பெரும்பங்கம் விளைவிக்கும் என்பதுடன், 3 வருட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் யுத்தநிறுத்த உடன்படிக் கைக்கும் பாரதூரமான விளை வையே ஏற்படுத்துமென நாம் அஞ் சுகிறோம்.

யுத்தநிறுத்த காலப்பகுதியில் பல பொறுப்பாளர்களையும் போரா ளிகளையும் இவ்வாறான துரோகத் தனமான தாக்குதல்களால் இழந் தும்கூட, பொறுமைகாத்துவரும் தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் சீண்டும் நடவடிக்கை யாகவே இவ்வாறான சம்பவங்கள் அமைகின்றன. இவற்றினால் ஏற் படப்போகும் விளைவுகள் தொடர் பாக இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவானதுதனது அவதா னிப்பையும், அறிக்கையையும்வெளி யுலகிற்குத் தெரியப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறோம்.

## அரசின் நடவழக்கைகளை...

யும். கோவில் வீதியூடாக சென்று ஐ.நா பிரதிநிதியின் அலுவலகத் துக்கு சென்று மகஜர் கையளிக்கப் படும்.

தொடர்ந்து கோவில் வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் யாழ். அலுவல கத்துக்கு சென்று மகஜர் கைய ளிக்கப்படும்.

அங்கிருந்து தொடர்ந்து சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக் கப்படும்.

அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி யைச் சென்றடைந்து அதனூடாக கண்டி வீதி வழியாக யாழ். செய லகத்தை சென்றடைந்து மகஜர் கையளிக்கப்படும். இதன் பின்னர் பிரகடனம் வாசிக்கப்படும்.

இந்தப் பேரணியில் யாழ். பிர தேச மக்கள் யாழ்.இந்துக் கல்லூரி யின் முன்பாக சென்று கூடி அங்கி ருந்து கந்தர்மடம் சந்தியை வந்த டைந்து பிரதான பேரணியில் இணை வர்.

நல்லூர் பிரதேச மக்கள் குமார சுவாமி வீதியால் சென்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக சென்று பேரணியை பலாலி வீதியில் சந்திப்பர்.

மாணவர் அமைப்பினர் பழம் வீதியால் சென்று பேரணியுடன் இணைந்துகொள்வர்.

வடமராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மக்கள் யாழ். பல்கலைக்கழகத் தில் ஒன்றுகூடி பேரணியில் இணை ந்துகொள்வர்.

தென்மராட்சி பிரதேசத்திலி ருந்து வரும் மக்கள் சிவன் அம்மன் வீதியிலிருந்து ஆரம்பித்து பலாலி வீதியூடாக பரமேஸ்வரா சந்தியில் பேரணியுடன் இணைந்துகொள்வர்.

பேரணியில் கலந்துகொள்வ தற்காக வரும் மக்களை ஏற்றி வருவதற்கான ஏற்பாடுகளை அந் தந்த பிரதேசங்களின் பொது அமைப்புகள் ஒழுங்கு செய்துள் ளன.

இந்தப் பேரணியில் அரச அரச சார்பற்ற, கூட்டுறவு, கல்வி, கடற் தொழில், விவசாய, வர்த்தக, கிரா மிய பொது அமைப்புக்களை பங்கு பற்றுமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் வர்த்தகர் கள் வர்த்தக நிலையங்களை மூடி உதவியாளர்கள் சகிதம் பேரணி யில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.

கண்டனப் பேரணியில் பங்கு பற்றும் மக்கள் பேரணி முடிவ டைந்த பின்னர் அந்தந்த பிரதேசங் களுக்கு செல்வதற்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன.

தீவக பிரதேச மக்கள் பழைய பூங்கா வீதியிலும், நல்லூர் யாழ்ப் பாணம் பிரதேச மக்கள் சோமசுந் தரம் வீதியிலும், தென்மராட்சி பிர தேச மக்கள் கண்டி வீதியில் மாம் பழம் சந்தியிலும், மாணவர் அமைப் பினர் கச்சேரியிலும்–

வடமராட்சி, கோப்பாய், அச்சு வேலி பிரதேசங்களைச் சேர்ந்தவர் கள் கச்சேரி – நல்லூர் வீதியிலும், காரைநகர், சண்டிலிப்பாய், சங் கானை, தெல்லிப்பளை, உடுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வர்கள் ஆஸ்பத்திரி வீதி மற்றும் கண்டி வீதி ஆகிய இடங்களிலும் ஒன்றுகூடி வாகனங்களில் செல்லு மாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர்.

## நாணய மாற்று வீதம்

| ணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| மெரிக்க டொலர் | 99.01 | 99.92 |
| ஸ்ரேலிங் பவுண் | 189.57 | 192.25 |
| யூரோ | 130.23 | 132.42 |
| சுவிஸ் பிராங் | 84.38 | 86.38 |
| யென் | 0.9425 | 0.9604 |

# மரண அறிவித்தல்கள்

## தர்மறோஜினி பஞ்சரத்தினம்

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த மெதடிஸ்த மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை தர்மசறோஜினி பஞ்சரத்தினம் 28.02.2005 திங்கட்கிழமை கிளிநொச்சியில் காலமானார். அன்னார் ஓய்வுபெற்ற தபால் அதிபர் பஞ்சரத்தினத்தின் (தும்பியப்பா) மனைவியும், காயத்திரி, காலஞ்சென்ற நிமல் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு கிளிநொச்சி – பரவிப்பாஞ்சானில் அமைந்துள்ள ஊடக இணைப்பு செயலகத்தில் 03.03.2005 வியாழக் கிழமை காலை நடைபெற்று 10.00 மணிக்கு இறுதிக் கிரியைக்காக கிளி நொச்சி திருநகர் பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற் றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
வே.கு.பஞ்சரத்தினம்
(கணவர்)

பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

## திருமதி அப்பாத்துரை அபயலக்ஷ்மி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமா கக் கொண்ட திருமதி அப்பாத்துரை அபயலக்ஷ்மி அவர்கள் 01.03.2005 நேற்று இரவு காலாமானார்.

இவர் காலஞ்சென்ற அப்பாத்துரையின் மனைவியும், திருமதி கமலா தேவியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிவஞானம் ஆகியோரின் சகோதரியும், சு.சிவகுமாரன் (உரிமையாளர் 'சுந்தர்ஸன்') அவர்களின் அன்பு மாமியாரும், பிரதீபன், சியாமி, றொபிக்கா, பிருந்தி, நிதர்சனன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 3.00 மணி (பழைய நேரம்) பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள் கிறோம்.

தகவல்
சு.சிவகுமாரன்
உரிமையாளர் 'சுந்தர்ஸன்'
மானிப்பாய்

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

## புவியியல்

சூழல் மூலகங்களும் சூழல் முகாமைத்துவமும்

மூன்று மணித்தியாலம்
*Three hours*

**பொருத்தமானது அல்லது மிகச் சரியானது எனக் கருதும் விடையைத் தெரிவு செய்க**

01. சூழல் தொகுதி என்பது
  - i. உயிருள்ள சூழ்லைக் குறிக்கும்
  - ii. பௌதிக அம்சங்களைக் குறிக்கும்.
  - iii. உயிருள்ள, உயிரற்ற சூழலைக் குறிக்கும்.
  - iv. தாவர சாகியத்தைக் குறிக்கும்.

02. வளிமண்டலத்தில் பெருமளவில் காணப்படும் இரு வாயுக்கள்.
  - i. நீராவி, ஹீலியம் ii. நைதரசன் , ஒட்சிசன்.
  - iii. ஒட்சிசன், நீராவி iv. காபனீரொக்சைட் , ஹீலியம்

03. பல்வேறு பாறைகளினால் உருவான புவியின் மேற்படை
  - i. புவி ஓடு ii. அடையற்பாறை
  - iii. மான்றில் iv. கோளவகம்

04. தாவரங்கள் , விலங்குகள் அடங்கியதும் எப்போதும் உயிர்ப்புடன் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதுமான புவிப்படை
  - i. வளிக்கோளம் ii. நிலக்கோளம்
  - iii. நீர்க்கோளம் iv. உயிர்க்கோளம்

05. மனித நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்தும் எல்லா வளிமண்டலத் தோற்றப் பாடுகளும் இடம்பெறுவது
  - i. படை மண்டலத்தில் ii. வெப்ப மண்டலத்தில்
  - iii. மாறன் மண்டலத்தில் iv. மெசோ மண்டலத்தில்

06. பின்வரும் பாறைகளுள் அடையற்பாறை வகையைச் சார்ந்தவை
  - i. மணற்கல், சுண்ணக்கல் ii. சலவைக் கல், சுண்ணக்கல்
  - iii. சுண்ணக்கல், தொலமைற் iv. கொண்டலைற், மணற்கல்

07. செல்வாஸ் என்பது
  - i. கொஸ்கோ வடிநில மழைக்காடுகள்
  - ii. டானின் அயனப் புல் நிலங்கள்
  - iii. வட ஐரோப்பாவின் ஊசி இலைக் காடுகள்
  - iv. அமேசன் வடிநில மழைக்காடுகள்

08. சொல்பத்தாரா என்பது
  - i. இளகிய பாறைக் குழம்பை வெளியேற்றும் எரிமலை
  - ii. சாம்பல் தூசி என்பவற்றை வெளியேற்றும் எரிமலை
  - iii. நீராவியையும், ஆவியையும் வெளியேற்றும் எரிமலை
  - iv. வாயுக்களையும், புகையையும் வெளியேற்றும் எரிமலை

09. கடலானது தரைப் பகுதியை ஆக்கிரமித்தல் அல்லது பின்வாங்குதல் எவ்வாறு அழைக்கப்படும்.
  - i. கடற்கொந்தளிப்பு ii. கடற்கோள்
  - iii. பேரலைச் செயற்பாடு iv. மேற்கூறிய யாவும் சரி

10. பின்வருவனவற்றில் எது சூழல் தொகுதிகளை மட்டும் கொண்டது.
  - i. தாமரை, அல்லி, ஐக்கோணியா, பிஸ்ரியா
  - ii. பாலை, முதிரை, புல்வெளி, அல்லி
  - iii. காடு, தாமரை, அல்லி, அல்கா, பாலை
  - iv. குளம், வீட்டுத் தோட்டம்; காடு, சமுத்திரம்

11. ஒரு சூழலில் தாவரங்களோ அல்லது விலங்குகளோ நிரந்தரமான சாகியம் ஒன்றை உருவாக்கும் படிமுறை வழிமுறை வருதல் அல்லது சியஸ் தொடர்நிலை விருத்தி எனப்படும். மேலும் வழிமுறை வரமுடியாத நிலை எவ்வாறு அழைக்கப்படும்.
  - i. நிரந்தர சூழல் ii. சூழலியல் உச்சம்
  - iii. உயர் சாகியம் iv. துணை வழித்தொடர்

12. பிராணிகளின் மேய்ச்சல் நிலமென அழைக்கப்படுபவை
  - i. கோதுமை பரந்துள்ள இடங்கள்
  - ii. அயனப் புல்வெளியுள்ள இடங்கள்
  - iii. தாவரப் பிளாந்தன் பரந்துள்ள இடங்கள்
  - iv. அயனக்காட்டு மரங்கள் உள்ள நிலப்பரப்பு

13. சூழல் தொகுதியொன்றினுள் சக்திப் பாய்ச்சல் மேலே செல்லச் செல்ல பெரிதும் குறைக்கப்படக் காரணம்
  - i. மேல் மட்டங்களின் செயற்பாட்டுக்கு சூரிய ஒளி தேவையில்லை
  - ii. பச்சைத் தாவரங்கள் சூரியக் கதிர் வீசலில் குறிப்பிட்டளவை நிலை நாட்டு வதால்
  - iii. நுகரிகளின் செயற்பாடுகள் சூரிய ஒளியில் தங்கியில்லை
  - iv. பிரிகையாக்கிகள் சூரியக் கதிர்வீசலைத் தடைசெய்வதால்


14. கொண்டு செல்திறனின் பூச்சிய நிலை
  - i. அரித்தல் ii. படிதல்
  - iii. சுரண்டல் iv. தேய்த்தல்

15. ஊசியிலைக் காடுகளின் பிரதான அம்சங்களாவன
  - i. இலைகள் நீண்டு தடித்து ஒடுங்கியனவான ஊசி வடிவ இலைகள் கீழ் நோக்கி வளரும் மரக்கிளைகள்
  - ii. இலைகள் நீண்டு தடித்து ஒடுங்கியனவான இலைகள் மேல்நோக்கி வளரும் மரக்கிளைகள்
  - iii. இலைகள் நீண்டு தடித்து அகன்றன. கீழ் நோக்கி வளரும் மரக் கிளைகள்
  - iv. இலைகள் நீண்டு தடித்து அகன்ற ன. ஊசி வடிவ மேல் நோக்கி வளரும் மரக் கிளைகள்

16. அயன அயல் ஒருங்கல் வலயம் காணப்படும் எல்லைகள்
  - i. வட எல்லை $25^0$ – தென் எல்லை $10^0$
  - ii. வட எல்லை $15^0$ – தென் எல்லை $15^0$
  - iii. வட எல்லை $5^0$ – தென் எல்லை $5^0$
  - iv. வட எல்லை $20^0$ – தென் எல்லை $20^0$

17. இப்பாரிய நிலத்தின் ஒவ்வொரு அங்குலமும் எமது மக்களுக்கு அர்ப்பணமானதும் புனிதமானதுமாகும் என்ற வாசகம்
  - i. புறாண்லண்ட் என்பவரது உரையிலிருந்து எடுக்கப்பட்டது.
  - ii. சியாட்டில் என்பவரது உரையிலிருந்து எடுக்கப்ப்ட்டது.
  - iii. ரட்சல் என்பவரது உரையிலிருந்து எடுக்கப்பட்டது.
  - iv. மகிந்ததேரரது உரையிலிருந்து எடுக்கப்பட்டது.

18. மண் உருவாக்க செயன்முறையின் விளைவாக உருவாகிய மண்லைன் எளிமை யான பக்கப்பார்வையின் கடிவாளங்களைக் கீழுள்ள படம் காட்டுகிறது. படத்தில் **ABC** அடி வாளங்கள் முறையே




  - i. கனிப்பொருட் பகுதி , சிதைவடைந்த தாய்ப்பாறை, அடித்தளப்பாறை.
  - ii. சேதனப்பொருள் பகுதி , கனிப்பொருட் பகுதி, சிதைவடைந்த தாய்ப்பாறை.
  - iii. சேதனப் பொருள் பகுதி , சிதைவடைந்த தாய்ப் பாறை, அடித்தளப்பாறை.
  - iv. சிதைவடைந்த தாய்ப்பாறை , கனிப்பொருட் பகுதி , அடித்தளப்பாறை.

19. **A** அடிவானம் நிறம் கூடியதாகக் காணப்பட்டால் அதற்கான காரணம்
  - i. கனிப்பொருட்கள் அதிகளவில் செறிந்திருக்கும்
  - ii. தாவரக் கழிவுகள் மேற்பரப்பில் நிறைந்திருக்கும்
  - iii. மேற்பரப்பு அரித்தலுக்குட்படாதிருக்கும்
  - iv. சேதனப் பொருட்கள் அதிகளவில் செறிந்திருக்கும்

20. இலங்கையின் ஈரவலயத்தில் அதிகமாகக் காணப்படும் மண்
  - i. செங்கபில நிற மண்
  - ii. சிவப்பு மஞ்சள் பொட்சோலிக்
  - iii. கல்சியமற்ற கபில மண்
  - iv. சிவப்பு – மஞ்சள் பொட்சோல்


21. சூழற்சமநிலையில் உலகளாவிய ரீதியில் கவனம் செலுத்துமுகமாக நடைபெற்ற மாநாடு.
  - i. றியோடி ஜெனீரோ மாநாடு 1992
  - ii. கியோட்டோ கூட்டமைப்பு மாநாடு 1997
  - iii. இந்திய தட்பவெப்பநிலை மாநாடு 2004
  - iv. ஸ்ரொக் ஹொம் ம ாநாடு 1972

22. இலங்கையின் மத்திய சூழல் அதிகாரசபையின் பணிகளில் ஒன்று
  - i. சூழல் பாதுகாப்புச் சட்டங்களை அமுல் செய்தல்
  - ii. சூழல் பாதுகாப்புக் கொள்கைகளை அமைத்தல்
  - iii. சூழலைப் பாதிக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் குறைத்தல்
  - iv. மேற்கூறிய யாவும் சரி


23. குடித்தொகைக்கும் , நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கும் இடையிலான கொள் கையை அரசு முன்வைத்த ஆண்டு
  - i. 1990 – சூழல் சட்டம் ii. 1996 – சூழல் பாதுகாப்புச் சட்டம்
  - iii. 1992 – பாலிச் சட்டம் iv. 1992 – நிலச்சட்டம்

24. பின்வரும் கூற்றுக்களில் எது நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை எடுத்துக்காட்ட உதவும்
  - i. தரம் குறைந்த உற்பத்தியைப் பயன்படுத்தல்
  - ii. மீளப் பெறக்கூடிய வளங்களை மட்டும் பயன்படுத்துவதால் அடையப்பெறலாம்.
  - iii. வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல்
  - iv. அழிவை ஏற்படுத்தாத அபிவிருத்தியால் மட்டும் அடையப் பெறலாம்.

25.



A



B



C

கடற்கீழ் புவிநடுக்க செயற்பாட்டின்போது கடல்நீர் மட்டத்தில் ஏற்படும் வேறுபாடுகள் **A BC** ஆகிய படங்களில் காட்டப்பட்டுள்ளன. அந்நிலையின் சரியான ஒழுங்கு.

**i.** கடல்மட்டம் குறைதல், அலை உயர்வு, பேரலைகள்.
**ii.** வற்றுப்பெருக்கு நீர்மட்டம் குறைதல், அலை உயர்வு.
**iii.** கடல் மட்டம், கடல்நீர்மட்டம் குறைதல், பேரலைகள்.
**iv.** கடல் பெருக்கு, நீர்மட்டம் குறைதல், அலை உயர்வு.

26. 2004 டிசம்பர் மாதம் புவி வெப்பமாற்றம் பற்றிய சர்வதேச மாநாடு நடைபெற்ற நகரம்
**i.** ஐக்கிய அமெரிக்கா **ii.** ரோக்கியோ
**iii.** லண்டன் **iv.** தென்னாபிரிக்கா

27. சூழல் பயங்கரவாதம் என்ற மைக்கல் கிறிஸ்டின் எழுதிய நூலில் பிரதானமாக உள்ளடங்கியுள்ள விடயம்
**i.** கோள வெப்ப உயர்வு சாத்தியமற்றது.
**ii.** ஜப்பான் வல்லரசாக எழுச்சி பெறும் அபாயம்.
**iii.** டைனோசர்களை மீண்டும் உயிருள்ள பிராணி ஆக்குதல்.
**iv.** மேற்கூறிய யாவும் சரியானது.

28. கபில நிற நகர்கள் உருவாகக் காரணமானவை
**i.** குளோரோ புளோரோ காபனும், வாகனப் புகையும்.
**ii.** வாகனப் புகையும், வளமாக்கிகளும்.
**iii.** வளமாக்கிகளும் குளோரோ புளோரோ காபனும்
**iv.** இரசாயனப் பதார்த்தங்களும், வாகனப் புகையும்.

29) வளிமண்டலம் வெப்பமூட்டப்படுவது
**i.** சூரியனிலிருந்து வரும் சிற்றலைக் கதிர்வீச்சால்
**ii.** புவியிலிருந்து செல்லும் நெட்டலைக் கதிர்வீச்சால்
**iii.** முகில்களால் உறிஞ்சப்படும் வெப்பக் கதிர்வீச்சால்
**iv.** நீராவி உறிஞ்சும் வெப்பக் கதிர்வீச்சால்

30) இலங்கையில் தென்கரையைச் சுற்றி கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் கடற்பரப்பில் பரம்பியுள்ள வளம்?
**i.** கடலடிக்கலைய வளம் **iii.** பவளத் திட்டு
**ii.** முற்றா நிலக்கரி **iv.** சிப்பிப் பாறைகள்

31) தொடர்ச்சியான அமுக்க விசையால் பாறையின் முட்டுத் தளத்தைச் சார்ந்து தனிப்பட்ட குறைத் துண்டு (பிளவு) ஒன்று தெளிவாக வரையறுக்கப்பட்டிருப்பின் அது எப்பெயரால் அழைக்கப்படும்?
**i.** படிப்பிளவுப் பள்ளத்தாக்கு **iii.** துண்டக்குறை
**ii.** பாறைப் பிதிர்வு **iv.** படிப்பு மலை

32) உலர்ந்து தளர்ந்திருக்கும் ஏதாவது ஒரு பொருளை காற்று அள்ளிவீசும் செயல்முறை
**i.** தேய்த்தல் **iii.** அரைந்து தேய்த்தல்
**ii.** அரித்தல் **iv.** வாரியிறைத்தல்

33) இலங்கைத் தக்கணப் பிரதேசத்தில் இருந்து வேறாகி ஒரு தனி பூகோள அலகாக மாறியது.
**i.** மயோசின் யுகத்தில் **ii.** மெசோசோயிக் யுகத்தில்
**iii.** பலியோசோயிக் யுகத்தில் **iv.** யுராசிக் யுகத்தில்

34) பிரான்சையும், பிரித்தானியாவையும் பிரிக்கும் நீரிணை
**i.** டேவிஸ் நீரிணை **ii.** குக் நீரிணை
**iii.** டோவற் நீரிணை **iv.** பாஸ் நீரிணை

35) பனிக்கட்டி அசைவின் திசைகளைக் கண்டறிவதற்கு முக்கிய ஆதாரமாக இருப்பது
**i.** நீள்குன்று **ii.** கெண்டித் துளைகள்
**iii.** படிவுத் திட்டைகள் **iv.** அலையும் பாறை

36) பின்வரும் கடல்களுள் உப்புத்திறன் குறைந்த கடல்
**i.** வெண் கடல் **ii.** கருங்கடல்
**iii.** பால்டிக்கடல் **iv.** செங்கடல்

37) தரைசெழிப்பற்றுப் போதல் என்பது
**i.** புவியின் பொருளாதார முக்கியத்துவம் குறைதல்
**ii.** பயிர்ச்செய்கை விளைவு படிப்படியாகக் குறைதல்
**iii.** தாவர வளர்ச்சித் திறன் குறைவடைதல்
**iv.** தரை படிப்படியாக தரிசு நிலமாக மாறுதல்

38) இலங்கையின் சூழற் பாதுகாப்பிற்கான சட்ட திட்டங்கள் மேற்கொள்ளும்போது கூடுதலாகக் கவனத்தில் கொள்ளப்பட்ட செயற்பாடுகள்?
**i.** கரையோர மணல் அகழ்வு, காடழிப்பு
**ii.** காடழிப்பும், கடற்தாளை அகற்றலும்.
**iii.** கரையோர மண் அகழ்வும், கடற்தாளை அகற்றலும்.
**iv.** காடழிப்பும், கோணற்பாளை அகழ்வும்.

39) அயன மண்டலத்துசேனைப் பயிர்ச்செய்கை நிலம் வளம் குன்றுவதற்குக் காரணம்.
**i.** விரைவில் மண் வரண்டு போதல்
**ii.** காடழிப்பினால் நிலம் வெடிப்படைதல்.
**iii.** வெப்பத்தினால் நிலம் துண்டச்சிதறலுக்கு உட்படல்
**iv.** விரைவில் நீரரிப்புக்கு உட்படல்.

40) வருடத்தின் எந்தவொரு மாதத்திலும் சராசரி வெப்பநிலை 18 செல்சியஸ் கூடுதலாக இருப்பதுடன் வருட மழை வீழ்ச்சி வருட ஆவியாக்க அளவிலும் கூடுதலாகக் காணப்படும். கெப்பனின் காலநிலைப் பிரிவு
**i. B** **ii. D**
**iii. C** **iv.A**

# பகுதி -II

அ பகுதியிலிருந்து இரு வினாக்களையும், ஆ பகுதியிலிருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து, நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1) **i)** உலகப் படத்தில் பசுபிக் சமுத்திரம், இந்து சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம் என்பவற்றில் புவிநடுக்கம் ஏற்படும் ஒவ்வொரு வலயங்களைக் குறித்துப் பெயரிடுக.
**ii)** புவி நடுக்கத்துக்கும் எரிமலையாக்கத்துக்கும் உள்ள தொடர்புகளை உதாரணத்துடன் விபரிக்க.
**iii)** கடற் கீழ்ப் புவிநடுக்கத்தால் சூழலில் ஏற்படும் பாதிப்புக்களைச் சுருக்கமாக விபரிக்க

2) **i)** அயன மழைக்காட்டின் ஊட்டச்சத்து வட்டத்தின் மிக எளிமையான உருவத்தை வரைந்து, கூறுகளுக்குப் பெயரிடுக.
**ii)** ஊட்டம் வட்ட முறையில் பரிமாற்றமடையும் செயற்பாடுகளை உள்ளடக்கிய யோசனையின் பரிமாற்றச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
**iii)** அயன மழைக்காட்டின் இயற்கைத் தாவர வகைகளைக் குறிப்பிட்டு அதன் முனைப்பான இயல்புகளை விளக்குக.

3) **i)** கடற்கரையோரப் பிரதேசங்களில் உருவாகும் தரைத்தோற்ற உறுப்புக்களுக்குப் பொறுப்பான செய்முறைகள் எவை?
**ii)** மேற்குறிக்கப்பட்ட செயற்பாட்டுடன் தொடர்புடைய நான்கு நிலவுருவங்களின் உருவாக்க முறைகளைப் புனையா வரைபடத்தில்மூலம் விளக்குக.

4) **i)** தரப்பட்டுள்ள ஆபிரிக்கப் புறவுருவப் படத்தில் அயன, உப அயன ஸ்ரெப்ஸ் காலநிலை **(BSH)** அயன, உப அயன பாலைவனக் காலநிலை **(BWH)** என்பனவற்றை நிழற்றிப் பெயரிடுக.
**i)** நீர் பெயரிட்ட இரு காலநிலை வகைகளினதும் முனைப்பான இயல்புகளையும், அவற்றின் இன்றைய நிலையினையும் விபரிக்க.

## ஆ பகுதி

5) **i)** சூழலின் நிலைமாற்றம் (தரங்குறைதல்) என்பதனால் நீர் கருதுவது யாது?
**ii)** சூழலின் தரங்குறைவதில் பின்வருவனவற்றின் பங்களிப்பிளை உதாரணங்களுடன் விபரிக்க.
**i)** விவசாயம்
**ii)** குடியேற்றம்
**iii)** நகரமயமாக்கம்

6) **i)** தாவரத் தொடர், உயிரிலித் தொடர் என்பவற்றை வேறுபடுத்துக.
**ii)** உயிர்ப் பல் வகைமை என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை விபரிக்குக.
**iii)** சூழற் பாதுகாப்பில் உயிர்ப் பல் வகைமையின் பங்களிப்பினைச் சுருக்கமாக விபரிக்க.

7) **i)** கனிப்பொருள் தவிர்ந்த மண்ணிலுள்ள பிரதான கூறுகளைப் பெயரிடுக
**ii)** ஒரு வளமான மண்ணின் பிரதான சிறப்பியல்புகள் எவை?
**iii)** இம் மண்ணின் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பான முறைகளை விளக்குக.

8) **i)** கோளச் சூழல் மாற்றமடைதல் என்பதனால் கருதப்படுவது யாது?
**ii)** கோளச் சூழலை பாதிப்படையச் செய்யும் மனித நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.
**iii)** ஏதாவது ஓர் மனித நடவடிக்கையைத் தெரிந்து மனித நடவடிக்கைகளின் பங்களிப்பையும் அதற்கான தீர்வுகளையும் விபரிக்குக.

செல்வி ப.கந்தசாமி BA (Hons) Dip-in-ed
கொக்குவில் இந்துக் கல்லூரி